மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
ராஜ்கோபால்ஸ்
[பட்டுச் சேலைகளின் காட்சியகம்]
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு
Registred as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

ஜவுளி வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி!
பூகொட
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
ராஜ்கோபால்ஸ்
பூகொட மொத்த,
சில்லறை விற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஆண்டு சித்திரை மீ 27 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 04 (10 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-131

# தமிழ் மகளிருக்கு கனேடிய நிறுவனம் உதவும்

## சுயதொழில் வாய்ப்புக்கு ஏற்பாடு

-- அலுவலகச் செய்தியாளர்: ஞா. குகநாதன் —

யாழ்ப்பாணம், மே.10,

**இராணுவ நடவடிக்கைகள், வன்செயல்களால் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்கு உள்ளாகியிருக்கும் வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ்ப் பெண்களுக்கு, கைகொடுத்து, வாழ்வளித்து உதவ கனேடிய தொண்டர் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.**

இராணுவ நடவடிக்கைகளால் தமது கணவன்மாரை இழந்தும், மற்றும் வகைகளாலும் அனாதைகளாகித் தமது குழந்தை குட்டிகளுக்கு வாழ்வு தரமுடியாமல் அல்லற்படும் பெண்களுக்கு சுயவேலைவாய்ப்புத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்க பிரஸ்தாப நிறுவனம் முடிவு செய்துள்ளது.

''கனேடிய இண்டர்நாஷனல் டெவலப்மென்ட் ஏஜன்சி'' என்ற பிரஸ்தாப தொண்டர் நிறுவனத்தின் பிரதிநிதிகள் இருவர் யாழ்ப்பாணத்தில் நடத்திய மதிப்பீடுகள் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த முடிவு வெளியிடப்பட்டதாக அறியவந்துள்ளது.

''கனேடிய இன்டர்நாஷனல் டெவலப்மென்ட் ஏஜன்சி'' நிறுவனத்தைச் சேர்ந்த திட்டமிடல் அதிகாரிகளான திரு. பிலிப் ஒமேருவும், திருமதி கணேசும் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

அவர்கள், யாழ். மாவட்டத்தில், இராணுவ நடவடிக்கைகளால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் பற்றிய விபரங்களை கேட்டறிந்தனர். பல சமூக நிறுவனங்களுடன் பேச்சு நடத்திப் பின்னணிகளையும் அறிந்து கொண்டனர்.

சனிக்கிழமை இங்கிருந்து கொழும்பு திரும்பிய தூதுக்குழுவினர், எவ்வகையான தொழில்களை ஆரம்பிக்கலாம், அவற்றை எவ்வாறு நடைமுறைப் படுத்தலாம், அவற்றுக்கு ஆகக் கூடிய செலவினம் எவ்வளவு என்பன போன்ற விவரங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

அதன் பின்னரே, நிர்க்கதிக்கு உள்ளாகி இருக்கும் ஆயிரக் கணக்கான தமிழ்ப் பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளித்து வாழ்வழிக்கும் தமது முடிவை அவர்கள் வெளிப்படுத்திச் சென்றனர் என

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய இந்திய பஸ் உடுப்பிட்டியில் தீக்கிரை

வல்வெட்டித்துறை, மே 10

பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான பஸ் ஒன்று இனந்தெரியாதவர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

இந்த பஸ் இந்தியாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்டதில் ஒன்றாகும்.

திங்கட்கிழமை பிற்பகல் 2-45 மணியளவில் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட இந்த பஸ் உடுப்பிட்டி பொது நூலகத்திற்குச் சமீபமாக வைத்து மறிக்கப்பட்டு கொளுத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை நேற்று 751 இலக்க இ. போ. ச. பஸ் சேவையும், தனியார் பஸ் சேவையும் இடம்பெறவில்லை. [ஒ-160]

# இரண்டு தமிழ்ப் பொலீஸார் கனகராயன்குளத்தில் கடத்தல்

## எல்லைச் சிங்களக் கிராமத்தில் ஜே. வி. பி. சூடு

வவுனியா. மே 10

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ்ப் பொலீஸார் ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவிலிருந்து வவுனியாவிற்கு, பழுதடைந்த ஜீப் ஒன்றை, வெரொரு வாகனத்தில் கட்டி இழுத்து வந்த போது கனகராயன்குளம் பகுதியில் வைத்து, இனந்தெரியாத ஆயுதந் தாங்கிய கோஷ்டி ஒன்று இருவரைக் கடத்திச் சென்றுள்ளது.

இவர்கள் இருவரும் முல்லைத்தீவு பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் கணேசபிள்ளை, கான்ஸ்டபிள் வெனிஸ்லாஸ் என்று பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை வவுனியா கிழக்கு மூலை தெற்குப் பகுதியில் அமைந்துள்ள தீர்வகம என்ற எல்லைப்புற சிங்களக் கிராமத்தில் ஆளும் கட்சியின் ஆதரவாளர் ஒருவரை ஜே. வி. பியினர் சுட்டுக் கொன்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திங்கள் இரவு இடம்பெற்ற இந்த சூட்டுச் சம்பவத்தின் போது வேறு ஒருவரும் காயமடைந்துள்ளார். (ஒ-164)

## அதிபர் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 10

பாடசாலை அதிபர் தரம் I, II, III பதவியுயர்வுக்கான போட்டிப் பரீட்சைகள் எதிர் வரும் 13ஆம் 14ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

மேற்படி பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் மீண்டும் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், புதிய அனுமதி அட்டைகள் கிடைக்காவிட்டாலும் பழைய அனுமதி அட்டையுடனேயே தோற்றலாம் எனவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-3)

## தெற்கு பல்கலைக்கழகங்கள் இன்று திறக்கப்படும்

### விரிவுரைகளில் பங்குபற்றுவது பற்றி மாணவர் ஒன்றியம் முடிவு செய்யும்

கொழும்பு, மே 10

தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்கள் இன்று புதன் மீண்டும் திறக்கப்படுகின்றன.

விரிவுரைகளில் பங்கு பற்றுவதா? இல்லையா? என்பதை இன்றுதான் தீர்மானிக்கப் போவதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:

28 பல்கலைக்கழக மாணவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 19 மாணவர் கடத்தப்பட்டுள்ளனர். மூன்று மாணவர் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்தமாதம் 23ஆம் திகதி உயர்கல்வி அமைச்சருடன் பேச்சுக்கள் நடத்தியபின்னர் 8 பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 4 பேர் யாழ். பல்கலைக்கழக மாணவர் (ஒ-எ)

**சுபநேரம்**
10—05—1989
புதன்கிழமை
சுபநேரம்:
04.24 முதல் 05.54 வரை
ராகுகாலம்:
11.54 முதல் 01.24 வரை
ஷஷ்டி விரதம்

## முச்சந்தி முரளி



உப்பிடிச் சில சலுகையளைச் செய்தாலாவது, எங்கடை ஆட்களுக்கு இரத்ததான சிந்தனை வருகுதோ எண்டு பாப்போம்......!

## வித்தியின் உருவப் படம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், மே 10

அமரரான முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் உருவப் படம் யாழ். பல்கலைக்கழக பொது அறையில் இன்றுபுதன்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு உபவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜாவினால் திறந்து வைக்கப் படவுள்ளது.

கலைப் பீடாதிபதி பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன், தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. வேலுப்பிள்ளை ஆகியோர் இந்த வைபவத்தில் உரையாற்றவுள்ளனர். (க-3)

## புதிய உ. அரச அதிபர்

அரியாலை, மே 10

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பணிமனையின் புதிய உதவி அரச அதிபராக திரு. சபாபதிப்பிள்ளை நியமிக்கப் பட்டிருக்கின்றார்.

இவர் இவ்வாரம் முதல் தமது கடமையைப் பொறுப்பேற்று உள்ளார். இவர் முன்னர் சண்டிலிப்பாய்ப் பிரிவு உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-13]

## நாடு திரும்பினார்

கொழும்பு, மே 10

பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்க ஒரு வார கால சீன விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை நாடு திரும்பினார். [இ]

## கடன் தொகை அதிகரிப்பு

கொழும்பு, மே 10

வறிய குடும்பங்கள் மின் விநியோகம் பெறுவதற்கு வழங்கப்படும் கடன் தொகை 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட இருக்கிறது.

இப்போது 3 ஆயிரம் ரூபா கடனையே மக்கள் வங்கி வழங்கி வருகிறது.

நாட்டில் எந்த வங்கியில் இருந்தும் இக்கடனைப் பெறலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## துப்பாக்கி பிரயோகம்

குருநகர், மே 10

நேற்றுமாலை 5-30 மணியளவில் யாழ் பிரதான வீதியில் மார்ட்டீன் வீதிச் சந்திக்கு அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து அந்தப் பகுதியில் சிறிது நேரம்பதற்றம் நிலவியது. (ஒ-51)

# மாகாண சபைகள் சட்டத்துக்குத் திருத்தம்

## அமைச்சர் விஜேக்கோன் தகவல்

கொழும்பு, மே. 10

**மாகாண சபைகள் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தும் விதத்தில் நிறைவேற்று உரிமைகளைப் பூரணமாக அனுபவிக்க வழி செய்யப்படும்.**

**அதற்கு வகை செய்யும் விதத்தில் மாகாண சபைச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வரப்படும்**

இந்தத் தகவலை பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் திரு. யு. பி. விஜேக்கோன் தெரிவித்தார்.

நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ தலைமையில் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

அப்போதே அமைச்சர் விஜேக்கோன் மாகாண சபைகள் சட்டத்துக்குத் திருத்தங்கள் கொண்டுவர இருப்பதைத் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பல பரவலாக்கப்பட்ட போதிலும், அவற்றுக்கான நிறைவேற்று உரிமைகள் பூரணமாகக் கிடைக்கவில்லை-

பொதுச் சட்டங்கள் பலவற்றில் உள்ள சரத்துக்களால் மாகாண சபைகள் நிறைவேற்று உரிமைகளைப்பெற முடியாத தடங்கல் நிலை உண்டு-

இதனை நீக்கும் பொருட்டு, மாகாண சபைகள் சட்டத்தில் உரிய திருத்தங்களைக் கொண்டு வந்து மாகாண சபைகளுக்கு நிறைவேற்று உரிமைகள், அதிகாரங்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது - என்று திரு. விஜேக்கோன் அரச எம்.பிக்களுக்கு விளக்கினார். (அ)

## யாழ். செயலகத்தில் நேற்று 4 பிரிவுகள் மட்டும் இயங்கின

யாழ்ப்பாணம், மே 10

யாழ். செயலகத்தில் நான்கு பிரிவுகள் மட்டும் நேற்று இயங்கின.

கணக்கியல் பிரிவு, உணவுத் திணைக்களம், சமூக சேவைப் பகுதி, ஓய்வூதியக் கிளை ஆகியவையே திறக்கப்பட்டிருந்தன. பிறப்பு, இறப்பு பதிவுக் காரியாலயமும் திறக்கப்படவில்லை.

கடந்த வாரம் முற்றாக இயங்காத செயலகம் நேற்று திறக்கப்பட்டபோது சுமாரான பொதுமக்கள் வந்திருந்தனர். [ஒ-3]

## நெல்லியடி பிரசைகள் குழு முன்னாள் தலைவர் சுட்டுக்கொலை

நெல்லியடி பிரசைகள் குழுவின் முன்னாள் தலைவரும் பிரபல சட்டத்தரணியுமான திரு. வ. மகாலிங்கம் (வயது 65) நேற்றுக் காலை மூத்தவிநாயகர் கோவிலடியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

திரு. மகாலிங்கம் கடந்த சனிக்கிழமை (6ஆம் திகதி) அவரது வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டார் என்றும் அதன் பின்னர் நேற்றுக் காலை சூட்டுக்காயங்களுடன் இறந்த நிலையில் மீட்கப்பட்டார் என்றும் தெரியவருகிறது.

திரு. மகாலிங்கம் சட்டத்தரணியும் பத்திரிகையாளரும் ஆவர். இவர் நெல்லியடியைச் சேர்ந்தவர். [ஒ-70-160]

## ஐந்து முறை அல்லது அதற்கு மேல் இரத்த தானம் செய்வோருக்கு விசேட சின்னம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மே 10

யாழ். வைத்தியசாலை இரத்த வங்கியில் ஐந்து தடவைகள் அல்லது அதற்குக் கூடுதலாக இரத்தம் தானமாக வழங்கியவர்களுக்கு விசேட சின்னம் (''பட்ஜ்'') வழங்கப்பட இருக்கிறது.

சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்படும் இச் சின்னத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் யாழ். இரத்த வங்கி அதிகாரிகளைச் சந்தித்து ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளலாம் என்று இரத்த வங்கி வைத்திய அதிகாரி உதயனுக்கு தெரிவித்தார்.

இந்தச் சின்னத்தை வைத்திருப்பவர்களுக்கு ஆஸ்பத்திரிகளிலும் வேறு அரசாங்க ஸ்தாபனங்களிலும் விசேட சலுகைகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (ஒ-3)

## வேட்டுச் சத்தம்

யாழ்ப்பாணம், மே 10

நேற்றுக் காலை சுமார் 7.30 மணியளவில் கோண்டாவில் கிழக்குப் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. [ஒ]

### பயங்கரவாதம் காரணமாக

# கடமை நேரத்தின்போது இறக்கும் ஆசிரியர் குடும்பத்துக்கு முழுச்சம்பளம்

யாழ்ப்பாணம், மே10

ஆயுதப்படையினருக்கு உள்ளதுபோலவே கடமையின் போது கொலையுண்ட ஆசிரியர் ஒருவரின் மனைவிக்குச் சம்பளமும் ஓய்வூதியமும் வழங்கலாம் எனக் கல்வி அமைச்சு யாழ் கல்விப்பகுதிக்குப் பணிப்புரை வழங்கியுள்ளது.

ஓர் ஆசிரியர் கடமையின் போது பயங்கரவாதச் செயல் ஒன்றினால் கொல்லப்பட்டிருந்தால் அவரின் மனைவிக்கு அந்த ஆசிரியர் பெற்ற சம்பளம் 55 வயது அடையும்வரை அவர் உயிருடன் இருப்பதாகக் கருதி வழங்கப்படலாம்.

அத்துடன் அவரின் மனைவிக்கும், அனாதைப் பிள்ளைகளுக்கும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

இந்த நிலைப்பாட்டை யாழ் கல்வித் திணைக்களம் ஏற்றுக் கொள்ளாமல் கல்வி அமைச்சின் ஆலோசனைக்கு அனுப்பியது.

கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாகக் கல்வி அமைச்சு அச்சங்கத்தின் நிலைப்பாடு சரி எனவும் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சம்பளமும் ஓய்வூதியமும் வழங்கலாம் எனவும் முடிவு எடுத்து இப்போது பணிப்புரை வழங்கியுள்ளதாக ஆசிரியர்சங்க வட்டாரங்கள் தகவல் தந்தன. (ச)

## பிரசா உரிமை பதிவு குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 10

இந்திய வம்சாவளித் தமிழரின் பிரசா உரிமை விண்ணப்பங்களைக் கையளிக்க ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய உள்ளது.

இந்திய வம்சாவளியினரின் பிரசா உரிமைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள நேற்றுக் கடைசி நாள் என்றும் —

பிரஸ்தாப விண்ணப்பங்களை செயலகங்களிலேயே சமர்ப்பிக்கவேண்டும் என்றும் பணிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நேற்று யாழ்ப்பா

(8 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எல்லா வகையான உள்நாட்டு, வெளிநாட்டு லெட்டபாட் வகைகளும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. மலிவுவிலை 8/50இல் இருந்து எல்லா விலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம், புத்தகசாலை (பஸ்நிலையம்), யாழ்ப்பாணம். [சி/2515]

சொந்தப் பாவிப்பிலுள்ள 71 ஸ்ரீ 2073 லான் மாஸ்டரும், ஒட்டுடன் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சி. செல்லையா, 123/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (10872)

National T. V. 20'', 14', Belling Oven National 2 in 1 5030, பாவித்த கட்டில், மேசை, சாப்பாட்டு மேசை, Cot, செற்றி செற், குசன் செற்றி இன்னும் பல உடன் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீராம், 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (10871)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் 9ஆம்திகதி செவ்வாயும், Golden Comet பிறவுண் பேடு சேவற் குஞ்சுகள் 10ஆம் திகதி புதனும், Hybro புறெயிலர் குஞ்சுகள் Hisex பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், 11ஆம்திகதி வியாழனும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (371)

### தேவை

உரும்பராயில் உள்ள பார்மஸி (Pharmacy) ஒன்றிற்கு நல்ல அனுபவம் வாய்ந்த பெண் விற்பனையாளர்கள் தேவை. (Sales Girls) தகுந்த விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 508, C/o உதயன், யாழ்ப்பாணம். [383]

### சைவ உணவகத்தில் ஆட்கள் தேவை

ரீ மேக்கர், சப்ளையர், சிப்பந்திகள் உடன் தேவை. தங்குமிட வசதி உண்டு. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். விலாசம் திரு. L. பக்கீர்சாமி, 375, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [10856]

### மணமக்கள் தேவை

அரசாங்க கூட்டுத்தாபனத்தில் Chemist ஆக உத்தியோகம் பார்க்கும் 34 வயது இந்து உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த 7 இல் செவ்வாய்க் குற்றமுள்ளவருக்கு மணமகளும், அழகும் குணமும் நிறைந்த அவரது 27 வயது சகோதரிக்கு மணமகனும் தேவை. பூரண விபரத்துடனும், ஜாதகத்துடனும் உடன் விண்ணப்பிக்கவும். இல. 58, C/o உதயன், யாழ்ப்பாணம். (10848)

### தமிழ் தட்டச்சாளர் தேவை

தெல்லிப்பழையில் வேலை செய்வதற்கு தமிழ்த் தட்டச்சாளர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். 509, C/o உதயன். [385]

### வாடகைக்கு

எங்களுடைய மேல்மாடியில் காரியாலயம், களஞ்சியம் போன்ற பாவனைக்கு சகல வசதிகள் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. காலை 9 மணி முதல் 11 மணிவரை விபரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ் சைனீஸ் றெஸ்ரோரன்ற் (Pvt) Ltd. முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [365]

### தவறிவிட்டது

சுப்பையா நித்தியானந்தன் ஆகிய எனது அடையாள அட்டை இல. 660091807 V உரும்பராய் அன்னங்கை வீதிக்கும் கோண்டாவில் வடக்கு சிவகாமி அம்மன் கோவிலுக்கும்இடையில் 30.4.89இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தியேட்டர் லேன், இணுவில் விலாசத்தில் ஒப்படைக்கவும். [10875]

### காணவில்லை

9 வயதுடைய யோகேஸ்வரி (கங்கா) என்ற சிறுமியைக் காணவில்லை. கடைசியாக சந்தனக்கலர் பிளவுஸும் நீல நிறப் பாவாடையும் அணிந்திருந்தார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: த. கதிரமலை, 90, K. K. S ரோட், கொக்குவில் மேற்கு. (10870)

### REPAIR SERVICE

பழுதடைந்த மின் உபகரணங்கள், மோட்டர் ஸ்ராட்டர், லிகுடைசர், Jar, மின்விசிறி, குளிர்சாதனப் பெட்டி ஆகியன தேவை. இவைகள் திருத்தி றீவைண்டிங் செய்தும் கொடுக்கப்படும். OMEGA, ஈழநாட்டிற்கு எதிரில், யாழ்ப்பாணம். (379)

### பைண்டிங்

உங்களது புத்தகங்கள் மற்றும் பாதுகாப்பான நூல்கள் அனைத்தும் நல்ல முறையில் [பைண்டிங்] கட்டிக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும், பூபாலசிங்கம் புத்தகசாலை [புத்தகக் களஞ்சியம்], மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/2511]

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும். சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

### ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 20- 5- 89 சனி, ஞாயிறு நாட்களில் நேரம் பகல் 10.30 - 12.00 மணி. S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [10837]

## தொல்புரத்தில் புதிய கோயில்

சுழிபுரம், மே 10

தொல்புரம் கிழக்கில் உள்ள துரையன்வளவு பிள்ளையார் கோயிலுக்கான அடிக்கல் நடுகை வைபவம் அண்மையில் நடைபெற்றது.

சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் இக்கோயிலைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-28)

## குமாரகோயில் புனரமைப்பு

காங்கேசன்துறை, மே 10

காங்கேசன்துறை குமார கோயிலைப் பல ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மிகப்பழைமைவாய்ந்த இந்த ஆலயம் பழுதடைந்துள்ளதை அடுத்து ஆலய மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பெற்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்றன.

இதை அடுத்து ஆலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. [ச-68]

## மிகுந்தபுர கிராமமக்களுக்கு உதவி

அம்பாறை மே 10

அம்பாறைத் தொகுதியைச் சேர்ந்த மிகுந்தபுர கிராமத்தில் மிகவும் வறுமைநிலையில் வாழும்தமிழ்க்குடும்பங்களுக்கு விரைவில் நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இக்கிராமத்தில் 178 தமிழ் குடும்பங்கள் வாழ்கின்றன.

முதற்கட்டமாக இந்த மக்களுக்கு சமையல் பாத்திரங்கள்வழங்கவும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சீருடைகள் வழங்கவும் வடக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரு. சர்மா அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு ஆவனசெய்துள்ளார். [ச-14)

## Vacancy for the Post of "STENOGRAPHER"

Wanted a Female "STENOGRAPHER" to Industrial Establishment.

Salary: Negotiable.
Application closes on 19-05-1989.

APPLY TO: 510
C/o UTHAYAN,
JAFFNA.

[455]

## Y. M. C. A. TALENT CONTEST

(Western & Eastern)

Organised by
THE Y's MEN's CLUB OF JAFFNA

SEMI - FINALS: 01- 07- 1989
FINALS: 08- 07- 1989

Venue: Chundikuli Girls' College
Entries Close: 16- 6- 1989
For details & Application form Contact:

GENERAL SECRETARY
JAFFNA. Y. M. C. A.

(C/2466)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## கொழும்பில் இருந்து பொருட்களை ஏற்றி வருவதற்கான கூறு விலைகள்

கொழும்பில் இருந்து யாழ். பல்கலைக்கழக களஞ்சியத்திற்கு பொருட்கள் ஏற்றி வருவதற்கு அனுபவமுள்ள லொறி உரிமையாளர்களிடம் அல்லது லொறி போக்குவரத்து முகவர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. கூறுவிலைகள் அனுப்புபவர்கள் தமது கொழும்பு முகவரியையும் யாழ்ப்பாண முகவரியையும் தெளிவாக எழுத வேண்டும். அத்தோடு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் போதிய அளவு களஞ்சிய வசதி உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
2. உங்களிடம் உள்ள லொறிகளின் எண்ணிக்கையையும் குறிப்பிட வேண்டும்.
3. கூறுவிலைகள் லொறியில் ஏற்றுவதற்கும் களஞ்சியசாலையில் இறக்குவதற்கும் ஆன கூலிகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
   - (அ) கொள்கலன் அளவில் கொண்டு வருவதற்கான கட்டணம்.
   - (ஆ) காட்போட் பெட்டி ஒன்றுக்கான கட்டணம்.
   - (இ) மரப்பெட்டி ஒன்றுக்கான கட்டணம்.
   - (ஈ) ஒரு லொறி லோட் நிறைந்த பொருட்களுக்கான கட்டணம்.
   - (உ) ½ லொறி லோட் நிறைந்த பொருட்களுக்கான கட்டணம்.

என்ற வகையில் நிரல்படுத்தி கூறுவிலைகளை நிதியாளர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு எதிர்வரும் 19-05-1989 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அனுப்பப்படும் சகல விண்ணப்பங்களும் அதன் கடித உறையின் இடது மூலையில் "Tender for Lorry Transport" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

- பதிவாளர்.

[சி-2542]

## 45 ஆம் நாள நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி - சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம்:
09- 10- 1936

● ● ●

மறைவு:
27 03- 1989

அமரரான எங்கள் அன்புத் தெய்வம்
உயர்திரு
**பொன்னம்பலம் பூபாலசிங்கம்**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 10- 5- 89 புதன்கிழமை காலை கீரிமலைத் தீர்த்தக் கரையிலும், சபிண்டீகரணம் அன்றையதினம் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்தித்து, சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்.

D. R. O. ஒழுங்கை,
தெல்லிப்பழை.

[10865]

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**சாம்பசிவம் செல்வராணி (சரோ)**

ஆண்டவன் படைப்பு: 03 - 12 - 1958
அழிப்பு: 20 - 05 - 1988

திதி: 10 05. 1989

அன்பான அம்மா!
வெள்ளை மனத்துடனே
கள்ளம் சிறிதுமின்றி
சிரிக்கச் சிரிக்கப் பேசி எம்மைச்
சிந்திக்க வைத்தாய் அம்மா!
சொந்தத்தில் ஓர் கவிதை எழுத ஆரம்பித்தோம்!
அதில் சோகமாய் ஓர் அத்தியாயம் முடிந்ததுவே
உன்னை நினைக்கக் கோலங்கள் - என்றும்
அழியாத கோலங்கள் ஆகிவிட்டது அம்மா!
எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்கி
உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
அன்பான ஐயா, அம்மா,
அக்கா, அண்ணு, உற்றுர், உறவினர்,
நண்பர்கள்.

மாணுங்கானை,
வல்வெட்டித்துறை.

(சி/2465)

## புதிய ஓடியோ வெளியீடுகள்

என் ரத்தத்தின் ரத்தமே,
தாய்நாடு, சொந்தக்காரன்,
யோகம் ராஜ யோகம்,
இது உங்க குடும்பம்,
தென்றல் சுடும்,
நான் வளர்த்த பூவே,
காதல் கீதம்,
சிவா.

பாட்டுக்கு ஒரு தலைவன்,
பொங்கி வரும் காவேரி,
ராஜாதி ராஜா,
புதுமாப்பிள்ளை,
பிள்ளைக்காக. (L.P)
எங்க ஊரு மாப்பிள்ளை,
பிக் பொக்கட்,
பாண்டி நாட்டுத் தங்கம்.

Tezaab — Hindi
Qayamat Se Qayamat Tak — Hindi

சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்துகொள்ள

**பாரத் வீடியோ சென்ரர்**
51/1, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

[10866]

## IN TREASURED MEMORY OF OUR BELOVED FATHER

## Areyaratnam Ratnarajah

Died on 10 th April 1989

We never knew when we woke up that morning
The sorrow the evening would be bringing!
The call was sudden, the shock was severe
To part with the one we loved so dear!!
Your heart stopped beating with kind kisses of Parting

Leaving us behind in sorrow ever lasting!!!
Sad was this day one month ago
Sad shall this day be for ever more
Until we all meet on that Beautiful Shore!

Fondly remembered and sadly missed by your ever loving

**Wife & Children.**

Rajakumari Ratnarajah,
Kings Avenue,
Urumparai.
10. 05. 89

(435)

## முதலாண்டு நினைவஞ்சலி



**செ. ரஸ்வரஜீவா (ஜவாஸ்)**
(புத்தூர் கிழக்கு)

தாயின் மடியில்: 11.10.1962
மண்ணின் மடியில்: 10.05.1988

நெஞ்சிலே இலட்சியம் தாங்கி மண்ணிற்கு
ஈந்தாய் உயிரை
மார்பிலே குண்டை ஏந்தி சாவினை சாவால் வென்றாய்
நேரிலே பறக்கும் கொடியுனைப் பாடி ஆடும்
பாரிலே பாய்ந்த இரத்தம் பாதையைத்
துலக்கிக் காட்டும்
ஊரிலே உன்னை எண்ணும் உள்ளங்கள் உறங்காதையா
யாரிலும் பழியைப் போட்டு யாகத்தை நிறுத்தாதையா
கருவிலே அமைந்த உந்தன் இலட்சிய விடிவிற்காக
நாங்களும் நல்குவோம் உதவி ஐயா!

புத்தூர் வாழ்மக்களும்,
நண்பர்களும்.

[10864]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோவில்
மகா கும்பாபிஷேகம் இன்று சிறப்புற நடைபெறுகிறது

# சித்தர் காலம் தொடக்கம் இன்றுவரை
# அற்புதங்கள் பல புரியும் மகாகணபதி

சித்தர்கள் வாழ்ந்து புகழ்பெற்ற சித்தன்கேணி நகரின் கண்ணே பெரியவளவு என்னும் ஸ்தலத்திலே வீற்றிருந்து தனது அடி வழிபடும் அடியவர் துயர் களைந்து காத்து அருள் புரிகிறார் ஸ்ரீமகாகணபதிப்பிள்ளையார். அவரது தேவஸ்தானம் அழகிய திருவிமானமும் பொலிவுறு மண்டபங்களும் கொண்டுள்ளதாய் இந்திரலோகத்து அமரரும் வந்து வணங்கும் தன்மையுடையனவாய் அமைந்துள்ளது. இவையாவும் அவ்வூர் மக்களால் இப்பொழுது புதுப்பிக்கப்பட்டதால் இந்தக் கோயிலின் அழகு மேலும் மெருகூட்டப்பட்டுள்ளது.

இங்கு இன்று காலை 9.20 மணி முதல் 10.30 மணிவரை உள்ளசுப நேரத்தில் விநாயகப் பெருமானுக்கும், சிவன், அம்மன், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் பதினேழு ஓமகுண்ட மகா கும்பாபிஷேகம நிகழ திருவருள் பாலித்துள்ளது.

## வரலாறு

இக்கோயில் அமைந்துள்ள பெரிய வளவு சென்ற நூற்றாண்டுமுற்பகுதி வரை சோலையாக விளங்கிற்று. அங்கு எழுந்தருளியிருந்த பிள்ளையார் நீண்டகாலமாக இப்பகுதி மக்களுக்கு அருள் பாலித்து வந்துள்ளார். இப்பிள்ளையாரின் மூர்த்திகரத்தையிட்டுஇன்றும் பல கதைகள் வழங்கிவந்தாலும் எங்கள் மக்களின் வரலாற்று உணர்ச்சி இன்மையினால் அவரின் வரலாற்றை முற்றாக அறியமுடியாமல் இருக்கிறது. ஆனால் அவரை வழிபட்டவர்களுக்கு சித்துக்கள் தொடக்கம் கேட்டவற்றை எல்லாம் கொடுத்து வந்தார் என்பது தெரிகிறது. சித்தன்கேணி என்ற ஊரின் பெயரைக் கொண்டு இதனை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். இப்பெயரில் இருந்து சித்தர்கள் இவ்வூரில் இருந்தார்கள். அவர்கள் பிள்ளையாரை வணங்கி பல சித்துக்களைப் பெற்றார்கள், அவர்கள் இங்குஒரு கேணியை உபயோகித்தார்கள். அதனால் ஊர் அந்தப் பெயரைப் பெற்றது என்பது வெளிப்படை.

ஆனால் இங்கு இன்று உள்ள கேணியோ அண்மையில் வாழ்ந்த இராமசாமி என்னும் பெரியாரினால் வெட்டப்பட்டது. சிததர்கள் வாழ்ந்த காலத்தில் இது இருந்திருக்க முடியாது. ஆகவே இக்கோயில் கட்டிட உருப்பெறு முன்பு பெரிய வளவு சோலையில், பிள்ளையார் ஒரு விருட்சத்தின் கீழ் இருந்தார் என்பதையும் கேணி ஒன்று இங்கு இருந்தது என்பதையும், பிள்ளையாரை வழிபட்டு சித்துக்கள் பெற்ற சித்தர்கள் இங்கு காணப்பட்டார்கள் என்பதையும் நாங்கள் ஊகிக்கலாம்.



சித்தன்கேணி - பெரியவளவு மகாகணபதிப் பிள்ளையார் கோவிலின் கவின்மிகு தோற்றம்.

நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு இவ்வூரில் வாழ்ந்த, வாழ்கின்ற சில வயது முதிர்ந்த பெரியவர்களை பேட்டிகண்ட பொழுது அவர்கள் இன்னும் ஒரு தகவலைத் தந்தார்கள். அதாவது சென்ற நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இங்கு ஒரு பெண் பிள்ளையாரை பூசித்து வந்தார் என்பது இத் தகவல் மேலே கூறிய கூற்றிற்கு ஆதாரமாக உள்ளது.

சென்ற நூற்றாண்டின் நடுப் பகுதியிலேயே, சித்தன்கேணியில் உள்ள மழவராயர் குடும்பத்தினர் கோயில் கட்டி சைவ ஆகம விதிப்படி பூசைகளை ஆரம்பித்து வைத்தார்கள். இக்குடும்பத்தினர் தொடர்ந்தும் பல திருப்பணிகள் செய்து வந்தார்கள்.

1898ஆம் ஆண்டு இக்கோயிலின் முக்கிய பகுதிகளை விசாலமாகக் கருங்கல்லினால் கட்டியவர் மட்டக்களப்பு கா. வயித்திலிங்கம் அவர்கள். இந்தமுறை நடந்த திருத்த வேலைகளுக்கும் அவர் ஞாபகார்த்த நிதியிலிருந்து ஒரு தொகையைப் பெற்றுள்ளோம்.

1940ஆம் ஆண்டில் இக்கோயிலினைப் பரிபாலிக்க ஒரு சபை அமைக்கப்பட்டது. இந்தச் சபையின் முதல் தலைவர் பெரியார் மா. கனகசபாபதி ஆவார். அவர் காலத்தில் பல திருப்பணிகள் இங்கு நடைபெற்றன. அவரைத் தொடர்ந்து திரு. தி. இராசசுந்தரம், திரு. மு. க. சுப்பிரமணியம், திரு. அ. சோமசுந்தரம், திரு. இ. மு. அருணாசலம் ஆகியோர் தலைவர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள். இவர்கள் காலத்திலும் இக்கோயில் தொடர்ந்து வளர்ச்சி பெற்றுள்ளது.

## சிற்ப ஓவியங்கள்

இன்று இக்கோயிலின் புகழை சாற்றி நிற்பன இக்கோயிலில் காணப்படும் சிற்பங்களும், ஓவியங்களுமே. இந்தப் பெருமையை எங்களுக்குப் பெற்றுத் தந்தவர் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் ஆவார். கிராமத்துப் பெரியார்களின் ஒத்துழைப்பைப் பெற்று புதிய திருப்பணிகள் செய்வித்ததுமல்லாமல், திருக்கோயிலிலும் தமிழ் நாட்டுக் கோயில்கள் போலச் சிற்பங்கள் ஓவியங்களுக்கு முதன்மை கொடுத்தார். நாங்களும் இந்த முறை திருத்த வேலைகள் செய்த பொழுது, முக்கியமாக மூலஸ்தான பண்டிகை இடித்துக் கட்டிய பொழுது சிற்ப வேலைகள் அமைப்பதில் கவனம் செலுத்தியுள்ளோம். குமாரசாமிக்குருக்களின் புகழ் நீடிக்க வேண்டுமென்பதே எங்கள் அவா.

## முப்பத்து மூன்று குண்ட கும்பாபிஷேகம்

குமாரசாமிக்குருக்கள் இன்னும் ஒருவகையில் எங்களுக்கு புகழ் ஈட்டித்தந்தார். யாழ்ப்பாண வரலாறு காணாதவிதத்தில் 1958 ஆம் ஆண்டு முப்பத்து மூன்று ஓமகுண்டம் அமைத்து கும்பாபிஷேகம் நடாத்தினர். இது அவரை சிவாச்சாரியார் மத்தியில் முதன்மை பெறச் செய்ததுடன் எங்கள் கோயிலின் புகழை நிலைநாட்டச்செய்தது. இக்கோயிலில் காலத்துக்குக் காலம் நடாத்தப்படும் கும்பாபிஷேகங்கள் ஏதோ ஒருவிதத்தில் விசேடத்தன்மை பெற்றுள்ளன. ஒரு சகாப்தத்துக்கு முன் வாழ்ந்த பிராமண உத்தமர்கள் 1912 ஆம் ஆண்டில் இக்கோயிலில் நடந்த ஒரு பெரிய கும்பாபிஷேகத்தைப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

க. அருணாசலம்
தலைவர்
சித்தன்கேணி
மகாகணபதிப்பிள்ளையார்
கோயில், பரிபாலன சபை.

(10862)

வெளிவாரிப்பட்டதாரி ஆசிரியர்கள்

# தென் இலங்கையிலேயே
# பலருக்குநியமனம்

அரியாலை, மே 10

இம்மாதம் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட வெளிவாரிப் பட்டதாரிகளில் பலருக்கு தென்னிலங்கையிலேயே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாதது இவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

தென்னிலங்கையில் நியமனம் பெற்றவர்கள் அநேகமானோர் திருமணமாகாதவர்கள்.

அதே சமயம் கிளிநொச்சி மாவட்டத்தில் நியமனம் பெற்றவர்களில் பலர் திருமணமானவர்கள் என்று தெரியவருகிறது

இவர்களது நியமனக் கடிதத்தில் தற்காலிக உதவி ஆசிரியர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-13)

## ச. ச. நிலைய விழாவில் பாராட்டு

குருநகர் மே. 10

கடந்த காலத்தில் மீன் சந்தையாக இருந்த இடத்தில் சனசமூக நிலையத்தைக் கட்டியெழுப்ப வியர்வையும், இரத்தமும் சிந்தி உழைத்த எமது அங்கத்தவர்கள் நினைவு கூரத்தக்கவர்கள். காலக் கிரமத்தில் இளைய தலைமுறையினரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளோம். மேலும், இப்பகுதிக்கென இருந்து வந்த மாநகர சபை கர்ப்பிணிகள் பராமரிப்பு நிலையம் கடந்தகால அசம்பாவிதங்களால் சேதமடைந்து இடைநிறுத்தப் பட்டுள்ளது. அதனைத் திரும்பவும் இயங்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வண்ணை - ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தால் மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சனசமூக நிலைய ஸ்தாபகரும் கட்டிடக் கலைஞருமான திரு. செ. தங்கராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக ஆலய தர்மசர்த்தா சபைத் தலைவர் திரு. இ. வெ. சந்தசாமி மங்கள விளக்கேற்றி வைத்தார், திரு. அ. ஜெயராமன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

வெற்றிபெற்றவர்களுக்குப் பெறுமதி வாய்ந்த பொருள்கள் பரிசளிக்கப்பட்டன. பரிசுப் பொருள்களை நிலையத்திற்கு அயலில் உள்ளவர்கள் வழங்கி இருந்தனர். நிலைய அமைப் பொறுப்பாளர் திரு. க. சிவகுமாரன் நன்றி தெரிவித்தார். இறுதியில் திரு. அ ஜெயராமன் குழுவினரது வயலின் இசை இடம்பெற்றது. (க - 51)

## ஓய்வுபெற்றார்

நெடுந்தீவு, மே 10

புங்குடுதீவு பிரதம தபாலகத்தின் தபாலதிபராக கடமையாற்றிய திரு. எஸ். ஞானப்பிரகாசம் தமது பதவியில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார் (ச-111)

## இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்த் திருவிழா பற்றித் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மே. 10

திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் அண்மையில் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. நல்லூர் உடுவில் உதவி அரசாங்க அதிபர்கள், திருநெல்வேலி கிராம சேவையாளர், நல்லூர் பிரதேச சபையின் அதிகாரமளிக்கப் பட்ட உத்தியோகத்தர் ஆகியோர் இவ்வாக்கெடுப்பை நடத்தினார்கள்.

இது பற்றி கூறப்படுவதாவது;

மேற்படி ஆலயத்தில் வருடாந்த தேர்த்திருவிழா தனியார் ஒருவரினாலேயே உபயமாக நடத்தப்பட்டு வந்தது.

இதற்கு இவ்வூர் மக்கள் ஆட்சேபத்தைத் தெரிவித்திருந்தனர். இதனால் ஆலய எல்லைக்குள் வதியும் மக்களிடையே வாக்கெடுப்பொன்றை நடத்த நல்லூர் உதவி அரசாங்க அதிபர் தீர்மானித்தார்.

இரகசிய வாக்கெடுப்பு கடந்த 29 ஆம் திகதி மேற்படி ஆலயததில் நடத்தப்பட்டது.

அப்போது தேர்த்திருவிழா பொதுவாகவே நடத்தப் படவேண்டும் என்ற முடிவுக்கே அதிகப்படியான வாக்குகள் விழுந்தன.

எனவே எதிர்வரும் உற்சவத்திலிருந்து பொதுமக்கள் சேர்ந்தே தேர்த் திருவிழாவை நடத்த வேண்டும் என உதவி அரசாங்க அதிபர் தீர்ப்பளித்தார். (க-16)

## யாழ் வட்டார கல்லூரிகளின் நாடகப் போட்டி முடிவுகள்

யாழ். கல்வித்திணைக்களத்தால் நல்லூர், சாவகச்சேரி, யாழ்ப்பாண வட்டாரக்கல்வி பிரிவில் நடத்தப்பட்ட 1988ஆம் ஆண்டுக்கான இசை நடன, நாடகப் போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்ற நாடகங்களும் பிரிவுகளும்:-

ஆரம்ப பிரிவு: யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையினரின் 'முயலார் முயலுகிறார்' சிறுவர் நாடகம்.

கனிஷ்ட இடை நிலைப் பிரிவு வைத்தீஸ்வர வித்தியாலயத்தினரின் 'நானே ராஜா'

கனிஷ்ட இடை நிலைப் பிரிவு: கொடிகாமம் அ. த. க. பாடசாலையின் காத்தவராயன் நாட்டுக் கூத்து

சிரேஷ் - இடைநிலைப் பிரிவு கைதடி விக்னேஸ்வராவின் ''இருள் கலைகிறது'' சமூக நாடகம்.

சிரேஷ்ட இடை நிலைப் பிரிவு: பெரியபுலம் ம.வியின் நீதி கேட்டாள் சோழ நாட்டாள் சமூக நாடகம்.

நாட்டுக்கூத்து வடமோடி நாவாந்துறை றோ. க. வின் ஏரோதியாள் சபதம்'

தென்மோடி புனித அந்தோனியார் றோ. க. வின் 'சங்கிலியன்'

மேற் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரியினரின் 'பழனி' நடன நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றது. [க-69]

## கல்வித் திட்டங்கள் ஆற்றலை வளர்க்க வேண்டும்

''அறிவையும் ஆற்றலையும் வளர்க்கக் கூடிய முறையில் பாடசாலைகளில் கல்வித் திட்டங்கள் அமைய வேண்டும். இவ்வாறு அமையும் கல்வி வாழ்க்கைக்குப் பயனளிக்கும் தொழில்சார் கற்கை நெறிகளின் முக்கியத்துவம் உணரப் பட்டுநிதானமாகப் பாடசாலைகளிலே ஊக்கி விக்கப்படுமானால் எதிர்காலத்தில் சுய தொழில் விருத்திக்கும் பேருதவியாக இருக்கும்''

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாலய வாழ்க்கைத் திறன் கல்வியான நெசவு பாடத்துக்கான கூடம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் தொழில்நுட்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செல்வி. க. வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாஸன் இவ் வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. சி. அன்னலிங்கம் பேசுகையில்'' இவ் வித்தியாலயத்தில் தொழிற் கல்விக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் நெசவு மனையியல் ஆசிரியைகளை நியமித்துத்தந்தமைக்காக யாழ் மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு நன்றி கூறுகிறோம் எனச்சொன்னர்,

## வீதி புனரமைப்பு

கணேசபுரம் குமாரசுவாமி வீதியை, கணேசபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைப்புச் செய்து வருகிறது. இவ் வேலைகள் யாவும் பூர்த்தியானதும் இந்த வழியாகக் கிளிநொச்சியில் இருந்து உருத்திரபுரத்துக்கு பஸ் சேவை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும்-

இதேவேளை புதிதாக இவ் வீதிக்கு தெருவிளக்குப் போடுவதற்கும் இச் சங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாகவும் சங்கத் தலைவர் திரு. எஸ். இராஜகுலசிங்கம் தெரிவித்தார். (ச-163)

## தேவார பாராயணம்

புளியங்கூடல் இந்தன் பிள்ளையார் தேவஸ்தானத்தில தற்போது நடைபெற்றுவரும் வருடாந்த உற்சவத்தை யொட்டி புளியங்கூடல் மகாமாரி தேவாரப்பாடசாலை மாணவ மாணவிகளின் தேவாரப் பாராயண நிகழ்ச்சி தினமும் இடம்பெற்று வருகின்றது. (க-16)

## திருக்கேதீஸ்வரம்

திருக்கேதீஸ்வர சிவன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

இரதோற்சவம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் தீர்த்தத் திருவிழா 20 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும். (ச)

## பிரதிக் கல்விப் பணிப்பாளர்

மட்டக்களப்பு மாவட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளராக இடமாற்றம் பெற்ற யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் தனது கடமையைப்பொறுப்பேற்றுக் கொண்டார். (இ-21)

## மாணவ தாதிகள்

பிராந்திய சுகாதார திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட முன்தேவை மாணவத் தாதிகளுக்கு ஐந்து மாதங்களாகியும் ஊதியம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (க-160)

கச்சியப்பரின் கந்தபுராணம்

## காஞ்சிபுரத்தைவிட இங்கேயே மிகச்சிறப்பாகப் பேணப்படுகிறது

தங்கம்மா அப்பாக்குட்டி கூறுகிறார்

சுன்னாகம், மே10

கந்தபுராணம் உமாதேவியார் சிவனை நினைத்து வழிபட்ட காஞ்சிபுரத்திலே கச்சியப்பசிவாச்சாரியாரால் கந்தனின் கடாட்சத்தினால் பாடப்பட்டதாயினும் கூட காஞ்சிபுரத்தைவிட யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே சிறப்பாகப் பேணப்பட்டு வருகிறது. புராணபடன நிகழ்ச்சிகளுக்கு பெருமதிப்புக் கொடுக்கும் அளவெட்டிக் கிராமத்திலுள்ள பிள்ளையார் கோவிலில் பல ஆண்டுகளாக பண்டிதர் மா. மாணிக்கம் சிறப்புற கந்தபுராணத்தைப் படித்துப் பலரும் பயன்பெற உதவினார். மிக இரத்தினச் சுருக்கமாக கந்தபுராண வரலாற்றுச் சுருக்கம் நூல் வெளியிட்டு விழா நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சி தருகிறது.

அளவெட்டி பண்டிதர் மா. மாணிக்கம் எழுதிய கந்த புராண வரலாற்றுச் சுருக்கம் நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடை[illegible] விழாவில் ஓய்வு பெற்ற அதிபர் அ. விஸ்வ[illegible] பெற்ற உதவி அரச அதிபர் சோ. அருணாசலம் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பண்டிதர் மு. கந்தையா தமது ஆய்வுரையில் இந்நூல் மூவகைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. அடைமொழியை அடுத்து தொடரும் நெடுவசனங்களின்றி சிறுசிறு வசனமாகத் தொடுத்து சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் எழுதிய சிசுபால சரிதம் நூலிலும் அவரது பிரசங்கங்களிலும் கையாண்டுள்ள உரைநடைப் பண்பை இந்நூல் அனுசரித்துள்ளது.

இக்காலத்தில் புராணம் படிப்போர் சொன்ன முடிவு, பொருண்முடிவுகளைச் செய்யுளில் அறியாதிருப்பதால் புராணம் கேட்போருக்கு இரசனை இல்லாதிருக்கிறது. சொன் முடிவு, பொருண்முடிவுகளை விளக்கிக்கொள்ள இந்த வசன நூல் துணை செய்கிறது.

இப்படி அவர் கூறினார்.

நூலின் முதற்பிரதியை [illegible] சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் [illegible] நம. சிவப்பிரகாசமும் பெற்றனர்.

சம்பன் கழகத் தலைவர் இ. ஜெயராஜ் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நூலாசிரியருக்கு தேவஸ்தானத்தின் செயலர் திரு. சிவ[illegible]ஸ்வரர் பொன்னாடை போர்த்திப் பொற்கிளிவழங்கி கௌரவித்தார். [இ-27]


★ முதலாவது ★
பிறந்த தின வாழ்த்து
செல்வன் நந்தகுமார் கோபிநாத்

ஜேர்மனியில் வசிக்கும் நந்தகுமார் செல்வராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோபிநாத் இன்று 10-5-89இல் தனது முதலாவது பிறந்த தினத்தை ஜேர்மனியில் கொண்டாடுகிறார்.

அவர் நோய்நொடியின்றி பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துபவர்கள் அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், கனடா சித்தப்பா, மாமாமார், அத்தைமார், மச்சாள்மார், சகோதரர்கள், ஜோதி அன்ரா, ரவி அண்ணு, சுதா அண்ணு, பிரபா அண்ணு, தீபன் அண்ணு, கௌரி அக்கா ஆகியோர்.

நா. சுதாகரன்
யாழ்ப்பாணம். (C/2462)



AIR CON FOR SALE

Almost New Beaver
Split Type Air
Conditioner B.T. U 28000
Single Phase 220 V 50 Hz
For immediate sale

CONTACT:
PROMOTERS Eng. Co Ltd,
844, POINT PEDRO ROAD,
NALLUR, JAFFNA.
(C/2464)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு ஆங்கிலம் எழுத, வாசிக்கத் தெரிந்த காசாளர், பில் கிளாக் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். திருநெல்வேலிச் சுற்றுடலுக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
நேரில் வரவும்.

**டயா எலக்ரோனிக்ஸ் கொம்பிலக்ஸ்**
**இல. 6, பலாலி வீதி,**
**திருநெல்வேலிச் சந்தி**

(10861)



# ★ வேலை வாய்ப்பு ★

**நல்ல சந்தர்ப்பம்**

## லிபியா

**இங்லிஸ் கொம்பனியில் பின்வரும் வெற்றிடங்கள் சகல வசதிகளுடனும் 10,000 ரூபாவுக்கு மேற்பட்ட சம்பளத்துடன் உண்டு.**

1. மேசன்மார்
2. தச்சுத் தொழிலாளர்
3. வெல்டர்
4. கம்பி வளைத்துக் கட்டுபவர்கள்
5. எயர் கொண்டிசன் மெக்கானிக்
6. மோட்டார் வையிண்டர்
7. ஓவர்கெட் லையின்ஸ்மன்
8. தொழிற்சாலை எலெக்றிசன்
9. Electrical Engineers (Salary 20,000/-)

## GERMANY - ஜேர்மனி

**எல்லா வயதினரும் விரைவில் நேரடியாக அனுப்பிவைக்கப்படுவர்.**

## சவூதி

**1. Govt. Bus Drivers**
**அரசாங்க பஸ் சாரதிகள்**
**6 நாள் - 8 மணி நேர வேலை**
**சாப்பாடு சகல வசதிகளுடனும்**
**6300 ரூபா சம்பளமும் தாராளமாக**
**ஓவர் ரைமும் வழங்கப்படும்.**

**ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்**
**Hospital Cleaners**

**ஒப்பின் விஸா - 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்**
**6 நாள் - 12 மணிநேர வேலை**
**ஒரு நேரச்சாப்பாடும் இருப்பிட வசதிகளுடன்**
**7200/- சம்பளம்**

**Car Washers**
**கார் கழுவுபவர்கள்**

**21 வயதுக்கு மேற்பட்டவர்கள்**
**6 நாள்- 8 மணி நேர வேலை**
**சாப்பாடு இருப்பிட வசதிகளுடன்**
**4500/- சம்பளமும்**
**தாராளமாக ஓவர் ரைமும்**

## சவூதி கொறியன் கொம்பனியில்

1. தெரு விளக்கு எலெக்றிசன்ஸ்
   ரூபா 7200 + சாப்பாடு
2. வாகன விளக்கு ரெக்னிசன்
   ரூபா 9000 + சாப்பாடு
3 சென்றல் AC ரெக்னிசன்
   ரூபா 8100 + சாப்பாடு
4. டீசல் எஞ்சின் மெக்கானிக்
   ரூபா 7200 + சாப்பாடு
5. வொயிலர் [Bo'ler] ரெக்னிசன்
   ரூபா 7200 + சாப்பாடு
6. கட்டிடப் பகுதி இயந்திர ஒப்பறேற்றர்
   ரூபா 5400 + சாப்பாடு
7. பிளம்பரும் பெயின்ரரும்
   ரூபா 8100 + சாப்பாடு
8. நீர் சுத்திகரிக்கும் ரெக்னிசன்
   ரூபா 7200 + சாப்பாடு

**மேற் கூறப்பட்ட வேலையாட்களுக்கு சாப்பாடு சம்பளத்துடன் 100 மணித்தியாலம் ஓவர்ரைம் கொடுக்கப்படும்.**

## சாவகச்சேரியில்

# திரு. V. யோகலிங்கத்தை

**கச்சாய் வீதியில் சந்தித்து விபரங்களைப் பெறவும்.**

**செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி**
**● காலை 10. 00 மணிக்கு முன் நேரில் வரவும்.**

# சிவா மாஸ்ரர்

**தொழில் ஆலோசகர்**
**ஏழாலை தெற்கு,**
**ஏழாலை.**

[சி-2539]


திருகோணமலையில்

# வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள்

வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி ஜூலை மாதம் முதல் வாரத்தில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கூட்டம் அண்மையில் வடக்கு, கிழக்கு மாகாண அரசு கல்வி கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாண அரசு கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஜனாப் எம். எம். மன்சூர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் விளையாட்டுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். [ச-98]

# புதிய தபால்பெட்டி

யாழ்ப்பாணம், மே 10

சுன்னாகம் பிரதம தபால் அதிபரின் முயற்சியினால் உடுவில் சுற்பொக்கனை கலைமதி ச. ச. நிலையத்தின் முன்பாக தபால்பெட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

உடுவில், சங்குவேலி, கந்தரோடை மக்களுக்கு நன்மை பயக்கும் முறையில் இப்பெட்டியை அமைத்ததற்காக கலைமதி ச. ச. நிலையம் தபால் அதிபருக்கு நன்றி தெரிவித்துள்ளது. (க)


# ★ சவூதி ★

# உடனடியான வேலைவாய்ப்பு

| | Salary |
|---|---|
| Heavy Duty Driver | 700 |
| Store Handler | 300 |
| Road Maintenance Technician | 600 |
| General Work Driver | 650 |
| Road Maintenance Labourer | 300 |
| Cleaning Labourer | 300 |
| Digging and Ground Specialist | 650 |
| Digging Labourer | 375 |
| Building Construction Foreman | 850 |
| Carpenter | 600 |
| Carpenter Helper | 350 |
| Furniture Painter | 600 |
| Furniture Painter Helper | 300 |
| Electrical Appliance Electrician (Low voltage) | 750 |
| Electrician | 850 |
| Power Plant Operator | 700 |
| **Support Section:** | |
| Heavy Duty Driver | 750 |
| Cook | 750 |
| Cook Helper | 400 |
| G. P. Doctor | 2500 |
| Male Nurse | 1200 |
| **Sports Hall:** | |
| Cleaning Labourer (Sports equipment) | 300 |
| Cleaning Supervisor | 700 |
| Cleaner | 300 |
| Swimming Pool Cleaner | 300 |
| Swimming Pool Operator | 400 |
| Electrician Sport Arena | 700 |
| Plumber Sport Arena | 650 |
| Painting Labourer | 350 |
| Carpenter | 650 |
| Cleaner (General) | 300 |
| Sewage Treatment Plant Operator | 700 |
| Pest Control Foreman | 800 |
| Pest Control Technician | 600 |
| Pest Control Helper | 400 |
| Facilities Foreman (Civil Engineer) | 1500 |
| Facilities Foreman (Electrical Engineer) | 1500 |
| Facilities Foreman (Machanical Engineer) | 2000 |
| Facilities Foreman (Communication Engr.) | 2000 |
| Typist | 700 |
| Telephone Technician | 850 |
| Telephone and Line Installation Technician | 750 |
| Telephone Operator | 700 |
| Computer Operator | 800 |
| Cleaning Supervisor | 700 |
| **Special Requirement:** | |
| Panel Beater / Glass Fitter | 750 |
| Auto Painter | 750 |
| Auto Battery and Electrical System Tech. | 700 |
| Radiator Technician | 700 |
| Wheel Balance Technician | 650 |
| Tyre Repair Technician | 650 |
| **Fire Department:** | |
| Warning System Operator | 700 |
| Driver Fire Trucks etc. | 800 |
| Fire Dept. Reports and Record Keeper | 700 |
| Assistant Technician Fire Protection System | 600 |
| **General Services:** | |
| Cleaner (Aircraft) | 300 |
| Loading, Unloading Labourer | 350 |
| Office Boy | 300 |

**S. O. M. C**

**● Age: 21 தொடக்கம் 49 வரை**

# T. V. TRAVELS

**Brown Road,**
**KOKUVIL.**

[C-2533]



## கேள்விப் பத்திர அறிவித்தல்

**நீர்ப்பாசனத் திணைக்களம்**
**வவுனிக்குளப் பிரிவு**

கீழ்க்காணும் வேலைகளுக்கு 1-06-1989 மு. ப. 10.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

நீர்ப்பாசன வேலைகள் — 12
நீர்ப்பாசன வீதி திருத்தும் வேலைகள் — 02

நடுத்தர கேள்விகளுக்குரிய கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்தும், சிறிய கேள்விகளுக்குரிய கேள்விப் பத்திரங்கள் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்தும் 26-4-89 முதல் 30-5-89 வரை மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு இப்பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

**எந்திரி க. செல்வரத்தினம்**
நீ. பொ. வவுனிக்குளம்.

நீர்ப்பாசனப் பணியகம்,
வவுனிக்குளம்.
1989-04-25

(C/2244)



## ஓராண்டு நினைவஞ்சலி

**மலர்வு:**
**01- 04- 1916**

**மறைவு:**
**22- 04- 1988**

**திதி: 10-05-1989**



## ● திருமதி நல்லம்மா நல்லையா ●

குடும்ப விளக்கொன்று அணைந்தது
குலத்தின் குரல் ஒன்று மறைந்தது
ஆனாலும் மறக்குமோ எம் நெஞ்சம் -உங்களை
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றூர், உறவினர்கள்.

முதலியார் வளவு,
இடைக்காடு,
அச்சுவேலி.

(404)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## இராசா - சோமஸ்கந்தன்

**(சர்மா)**

**பிறப்பு:** **21. 9. 1956**

**மறைவு:** **27. 03. 1989**

**திதி: 10.05.1989**
(புதன்)

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எங்கள் எல்லோரையும் பெருமை கொள்ளச் செய்து விட்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்ட அன்புச் செல்வமே! உனது ஆத்மா சாந்தியடைய நல்லூர்க்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாயார், தம்பி, சகோதரிகள்,
மாமன், மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்.

(C/2520)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சேவையாளர்களின் சேவை

## அரச அதிபர் ஊடாகவே பெறப்படவேண்டும்

### தொழிற்சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், மே10

இராணுவ அதிகாரிகளுக்கு கிராம சேவையாளர்களின் சேவை மற்றும் உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் அந்தப் பகுதி அரச அதிபர் ஊடாகவே பெறப்பட வேண்டும்.

முல்லைத்தீவில் நடைபெற்ற அம்மாவட்ட கிராம சேவையாளர் தொழிற்சங்க சம்மேளனத்தில் இவ்வாறு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

கூட்டம் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்றது.

முன்கண்ட தீர்மானம் குறித்து கூட்டத்தில் பலரும் கருத்துக்கள் தெரிவித்தனர்.

அப்போது-

★ இன்று நாம் [கிராம சேவையாளர்கள்] திரிசங்கு சொர்க்க நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ''ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்சச் சொன்னால் முடவனுக்குக் கோபம்'' இதுதான் இன்று எமது நிலை - என்றும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் பின்வரும் விடயங்களும் ஆராயப்பட்டன.

★ கிராம சேவையாளர்களின் சம்பளக் குறைபாடு.

★ சிங்களத்தில் தேர்ச்சி பெருமையால் கிராம சேவையாளர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள்.

★ விடுதி வசதிகள் ஏற்பாடு செய்துதர வேண்டியதன் முக்கியத்துவம்.

★ அலுவலர்களை இடம் மாற்றம் செய்யும்போது சங்கத்துடன் கலந்தாலோசிப்பது அவசியம். [ஓ-126]

## பொன்னாடை போர்த்தினர்

வல்வெட்டித்துறை, மே 10

திருபானந்தவாரியாரின் சீடரான இரா. சிவ அன்பு வல்வை முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவத்தின்போது ''அம்மனின் கிருபை'' என்னும் பொருள் பற்றி சங்கீதப் பிரசங்கம் செய்ததை ஒட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

தேவஸ்தானத்தின் சார்பில் தலைவர் ... இ. நடனசிகாமணி பக்தர்கள் மத்தியில் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (க-160)

## அடையாளக் கார்ட்டுகளை எல்லா கச்சேரிகளிலும் பெறலாம்

### ஆட்பதிவுத் திணைக்களம் ஏற்பாடு

தேசிய அடையாளக் கார்ட் வழங்கும் பணி மாகாண அடிப்படையில் பரவலாக்கப்படவிருக்கிறது.

இந்த ஆண்டு இறுதிக்குள் ஒவ்வொரு மாகாண கச்சேரியிலும் தேசிய அடையாளக்கார்ட் திணைக்கள பிராந்திய அலுவலகம் திறக்கப்படும் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பந்துல குலதுங்க தெரிவித்தார்.

மாகாண அலுவலகங்கள் திறக்கப்பட்ட பின்னர் அடையாளக் கார்ட் வழங்க தற்போது எடுக்கும் 3 வாரகால அவகாசம் ஒருவார காலமாகக் குறைந்துவிடும் என்றும் அவர் சொன்னார். (ஒ-எ)

## திருட்டு

கோப்பாய், மே 10

கோப்பாய்ப் பகுதியில் தொலைபேசிக் கம்பங்கள் இரவு வேளைகளில் உடைத்து வீழ்த்தப்பட்டு அதனுள் இருக்கும் இரும்புக் கம்பிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (க-72)

## அதிக அளவு மின்வலுவால் ஏற்பட்ட சேதம்

அண்மையில் இணுவில் பகுதியில் ஏற்பட்ட அதிகளவு மின்வலு தாக்கத்தால் பாவனையாளர் பலருடைய வீடுகளில் இருந்த குளிர்சாதனப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப்பெட்டிகள், நீர் இறைக்கும் மோட்டார்கள் ஆகியவை பழுதடைந்துள்ளன.

இது சம்பந்தமாகப் பாவனையாளர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## உபதபாற் கந்தோர்

வல்வெட்டித்துறை, மே 10

உடுப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் இருந்த உப-தபாற் கந்தோர் தற்போது சனநடமாட்டம் குறைந்த தூர இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அங்கு செல்வதற்கு அஞ்சுகின்றார்கள் என அறியப்படுகின்றது. (க-160)

## கச்சேரி அலுவலகங்கள் பம்பலப்பிட்டிக்கு

கொழும்பு, மே 10

கொழும்புக் கச்சேரியிலுள்ள அலுவலகங்கள் பம்பலப்பிட்டிக்கு மாற்றம் செய்யப்படவுள்ளன.

மேல்மாகாண மாகாணசபை அலுவலகம் இங்கு செயற்படவுள்ளதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (க-7)

## புங்குடுதீவில் திருட்டு

புங்குடுதீவு, மே 10

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 9ஆவது கிளையில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான மா, உணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தில் இரு வீடுகளிலும் 3ஆம் வட்டாரத்தில் ஒரு வர்த்தக நிலையத்திலும் பல பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (ச-131)

## ஊர்காவற்றுறை வரியிறுப்பாளர் சங்கம்

ஊர்காவற்றுறை பட்டினசபை வரியிறுப்பாளர் சங்கப் பொதுக்கூட்டம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலய குருமனையில் நடைபெறும். (ச)

## காணி அன்பளிப்பு

முல்லைத்தீவு சர்வோதய இயக்க பாலர் பாடசாலை, சிறுவர் பூங்கா என்பவற்றை அமைப்பதற்காக தமது அரை ஏக்கர் காணியை சிலாவத்தையைச் சேர்ந்த திரு. எஸ். நாகமணி அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சிறுவர் பாடசாலை, பூங்கா அமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று முல்லைத்தீவு சர்வோதய இணைப்பாளர் திரு. வி. கலைச்செல்வன் தெரிவித்துள்ளார். (இ-164)

## கந்தர் அநுபூதி மனனப்போட்டி

சுழிபுரம் பறளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இலட்சார்ச்சனையையொட்டி வருடா வருடம் நடத்தப்படும் கந்தர் அநுபூதி மனனப் போட்டிகள் உற்சவ நாட்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு இம்மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் சங்காபிஷேகத் தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும். [ச-28]


"டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!

சிங்கர் ஓடியோ ஒலி ஏற்றம்.

இலங்கையில் அதி உயர்வான விற்பனையைக் கொண்டுள்ள சிங்கர் தொலைக்காட்சிகளின் அதே தரச்சிறப்பும், உயர்தொழில்நுட்ப வடிவமைப்பும் கொண்டது.

சிங்கர் ஓடியோ-இன்றைய எலக்ரோனிக்ஸ் யுகத்தினுள் எங்களைக் கொண்டு செல்வதுடன், விரிவான பலரகங்களில் கிடைக்கிறது.

இலங்கையின் நாடளாவிய முன்னணி விற்பனையாளர்கள் அமைப்பின் ஆதரவும், விற்பனைக்குப் பிந்திய சேவையும் உண்டு.




ரூபா. 1990/-ல் இருந்து

சிங்கர் ஓடியோ.

சிறப்பான செயலாற்றல்

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாரி தடுப்பூசி ஏற்றுதல்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் கோமாரி தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கொக்குவில், கோண்டாவில் உரும்பராய் ஆகிய பகுதிகளில் கீழ்க் குறிப்பிடப்படும் திகதிகளிலும் நேரங்களிலும் நடைபெற உள்ளன.

கொக்குவிலில் 12 ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 7-00 மணி தொடக்கம் 8-30 மணி வரை மஞ்சவனப்பதிகோயில், மணியங்காடு, சொரணவடலி பிள்ளையார் கோயிலிலும்—

காலை 8-30 மணிமுதல் 9-30 மணிவரை பேக்கரியடி, பிடாரி கோயிலிலும்—

கோண்டாவிலில் 13 ஆம் திகதி காலை 7-00 மணிமுதல் 8-30 மணிவரை கோகுலவீதி டிப்போ சைட் ரோட்டிலும்—

காலை 8-30 மணிமுதல் 9-30 மணிவரை வாமாஸ் லேன், செல்லத்துரை வீதியிலும்—

காலை 7 மணிமுதல் 8-30 மணிவரை உரும்பராய் வேம்பன் ஒழுங்கையிலும் கோமாரி தடுப்பூசி போடப்படும். (ச)

## 2ஆம் வருட நினைவஞ்சலி



**● அமரர் M. சிமியாம்பிள்ளை ●**

(முன்னாள் யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர்)

தோற்றம்: 03- 03- 1925          மறைவு: 11- 05- 1987

ஆண்டு இரண்டு பறந்தாலும்
நாமோ உம்மை மறக்கவில்லை
நூறாண்டு சென்றாலும்
நூராது உன் நினைவு
பண்புள்ள தந்தையாய்
பாசமிகு கணவனாய், மாமனாய்
பணிவுள்ள கல்விப் பணிப்பாளனாய்
அவனியில் நீ வாழ்ந்த
வாழ்வு தனை நாம் மறவோம்.

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 11- 05- 89 வியாழக்கிழமை காலை 6. 15 க்கு யாழ் புனித மரியாள் பேராலயத்திலும், யாழ் அடைக்கல நாயகி ஆலயத்திலும் குருநகர் புனிதயாகப்பர் ஆலயத்திலும் காலை 5. 30 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

—சிமியாம்பிள்ளை குடும்பத்தினர்

ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.          (10869)

உ
சிவமயம்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

[10—05—1989]



**செல்லையா தர்மலிங்கம் அவர்கள்**

அன்னையின் மடியில்: 20 – 11 – 1912          இறைவன் அடியில்: 03 – 05 – 1987

அன்புத் தெய்வமே! எங்கள் ஒளி விளக்காக திகழ்ந்து எல்லோருக்கும் நல்வழிகாட்டி தாங்கள் இறைவனடி சேர் து ஈராண்டு ஆகும் இந்நாளில் தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிந்தாமணி பிள்ளையார் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.          [10874]




சேமிப்புச் சான்றிதழ் திட்டம் வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படம். வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு. பத்மநாதன், வவுனியா அரசாங்க அதிபர் திரு. ரி. லங்காநேசன், இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. ஆர். வில்லவராஜா, வங்கி உதவி முகாமையாளர் திரு. ஆர். ரத்னகோபால் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

### இலங்கை வங்கியின் சேமிப்பு சான்றிதழ் திட்டம்:

# வவுனியாவில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மே 10

''இந்த சேமிப்புத் திட்டம், சேமிப்பினால் வருகின்ற வட்டிப் பணத்தை முன்கூட்டியே மக்கள் பெற வழிசெய்கிறது. அத்துடன் சான்றிதழின் முதிர்ச்சிக் காலத்தில் சான்றிதழை இலங்கையின் எப்பாகத்திலாவது உள்ள இலங்கை வங்கிக் கிளையில் சமர்ப்பித்து பணத்தை மீளப் பெறவும் அது வழி செய்கிறது''

இலங்கை வங்கியின் 50 ஆண்டுகாலத் தொடர்ச்சியான சேவையை முன்னிட்டு அறிமுகம் செய்யப்பட்ட சேமிப்புச் சான்றிதழ் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் வவுனியா மாவட்டத்தில் 3ஆம் திகதி நடைபெற்றபோது தலைமை வகித்த மாவட்ட முகாமையாளர் திரு. ஆர். வில்லவராஜா மேற்கண்டவாறு கூறினார்,

வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா அரசாங்க அதிபர் திரு. ரி. லங்காநேசன் உரையாற்றுகையில்,

''சிறுவயதிலிருந்தே மக்களிடையே சேமிப்புப் பழக்கம் இருக்கவேண்டும். சேமிப்பால் மக்களின் எதிர்கால வாழ்வு சுபீட்சம் அடையும்'' என்று கூறினார்.

பிரதம விருந்தினர் திரு. ரி. லங்காநேசன் வாடிக்கையாளர்களுக்கு சேமிப்புச் சான்றிதழ்களை வழங்கினார்.

மேற்படி வைபவத்தில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு. பத்மநாதன், விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. கிருஷ்ணர் மாவட்ட வைத்திய அதிகாரி (மகப்பேறு) திருமதி மாணிக்கராஜா, மக்கள் வங்கி முகாமையாளர் திரு. இளம்பிறைநாதன் முதலியோர் கலந்து கொண்டனர்.

இந்து, கிறிஸ்தவ, பௌத்த முஸ்லிம் ஆலய வழிபாடுகளுடன் ஆரம்பித்த இந்த வைபவத்தின் முடிவில் வவுனியா வங்கி உத்தியோகத்தர் திரு. க. மயில்வாகனம் நன்றியுரை வழங்கினார், (க)

# நான்கு வயதுப் பாலகன் நாய் போல்குரைத்து மரணம்

முல்லைத்தீவு, மே 10

இருமாதங்களுக்கு முன்பாக விசர் நாய்க்கடிக்கு ஆளானநான்கு வயதுப் பாலகன் ஒருவர் நாய்போல் குரைத்து விட்டு மரணமான சம்பவம் முல்லைத்தீவைச் சேர்ந்த சிலாவத்தையில் நடைபெற்றது.

சிலாவத்தை உடுப்புக்குளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பியின் மகன் ஆனந்தியன் என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

ஆனந்தியன் மரணம் பற்றி நடைபெற்ற மரணவிசாரணையின் போது இறந்தவரின் தாயாரானபுஷ்பராணி தனது சாட்சியத்தில் கூறியதாவது; இரண்டு மாதங்களுக்கு முன்பாக எனது மகனுக்கு நாய் ஒன்று கடித்தது. அந்நாய் விசர்நாய் என்று தெரியாததினால் நாம் உரிய நேரத்தில் அதற்கான தடுப்பு ஊசி போடவில்லை.

சம்பவம் நடைபெற்றதினம் எனது பிள்ளை நாய்போல் குரைத்தது. உடனடியாக அவரை முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அங்கு அனுமதிக்கப்பட்டபின் எனது மகன் மரணமானார்.

மரணவிசாரணை நடத்திய முள்ளியவளை மரண விசாரணை அதிகாரி திரு. கி. தியாகராசா விசர் நாய் கடியினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். (ச-92)

## வீடு தீப்பிடித்தது

யாழ் மணியம் தோட்டம் 5ஆம் குறுக்கு வீதியில் அண்மையில் வீடொன்று தீப்பிடித்து சாம்பலாகியது.

இத்தீவிபத்தில் முப்பத்தையாயிரம் ரூபாவுக்கும் மேலாக நஷ்டம் ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

மணிப்புரி கிராம அபிவிருத்தி சபை மணிப்புரி இளைஞர் சேவை மன்றம் ஆகியவற்றினதும் பரோபகாரி ஒருசிலரதும் முயற்சியால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்குத் தற்காலிகமாக கொட்டில் ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. (க-51)

## சித்தர் காலம் தொடக்கம்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்று பேசிக்கொள்வார்கள். இதன் காரணமாகவே நாங்களும் இக்கோயிலின் வரலாற்றுக்கு ஏற்றதாக இன்று பதினேழு குண்டங்கள் வைத்து மகாகும்பாபிஷேகம் நடாத்துகிறோம். சகலாகம சங்கிரகர் சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா குருவாக இருந்து இதனை நடாத்துவார்.

### பிள்ளையார் அருளினால் பக்தர் செய்த சாதனைகள்!

இப்படியான கும்பாபிஷேகம் நடாத்த எங்களைத் தூண்டிய இன்னுமொரு காரணம் இதுகாறும் பிள்ளையார் சுரந்த அருள் இப்பொழுது பாலஸ்தாபன அபிஷேகம் செய்து திருத்தவேலைகள் நடைபெற்றதினால் தடைபடக்கூடாது என்பதே. இவர் சுரந்த பேரருளினால் இவ்வூரில் பல பெரியார்கள் உருவாக்கப்பட்டார்கள். அவர்களில் இரண்டு தலைசிறந்த பக்தர்கள் இங்கு குறிப்பிடவேண்டியவராய் உள்ளார்கள்.

இருவரும் பிள்ளையாரை வழிபட்டு அவர் அருள்பெற்று பல சாதனைகள் புரிந்தார்கள். ஒருவர் அம்பலவாண நாவலர், மற்றவர் மட்டக்களப்பு கா. வைத்திலிங்கம் அவர்[illegible] முன்னவர் ஆறுமுகநாவலரின் பிரதம சிஷ்யர்[illegible]ராய் இருந்து சைவமும் தமிழும் வளர்க்க உதவி, இன்று யாழ். குடாநாட்டில் சிறந்த கல்லூரிகளில்ஒன்றாகிய வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியை தாபித்ததுடன் சிதம்பரத்தில் ஒரு மடாலயத்தையும் நடாத்தினார். மற்றவர் தலைசிறந்த வியாபாரியாகத் திகழ்ந்து, பெரும் செல்வம் ஈட்டி யாழ் குடாநாட்டிலும், மட்டக்களப்பிலும் பல கோயிற் திருப்பணிகள் செய்து கதிர்காமம், திருச்செந்தூர், கிரிமலை ஆகிய இடங்களில் பெரிய மடங்கள் நிறுவி பல தான தருமங்களில் ஈடுபட்டார் இவருக்கு பலமுறை பிள்ளையார் கனவிலே தோன்றி வழி நடத்தினார் என்று சொல்லப்படுகிறது.

### இன்றைய அற்புதங்கள்

இன்று அமெரிக்காவிலே சிலர் வாழ்க்கையில் ஏற்படும் அநுபவங்கள், அற்புதங்களைச் சுட்டிக் காட்டியே சமயக் கொள்கைகளைப் பரப்புகிறார்கள். இந்தியாவிலே தயாப்பாக், புட்டபர்த்தி போன்ற இடங்களில் பல அறிஞர்கள் கூட தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் அற்புதங்கள் பற்றிப் பேசிக்கொள்கிறார்கள். [illegible] மறுப்பதற்கில்லை. சித்தன் கேணியில் 1984, 87இல் குறிப்பிடக் கூடிய அற்புதங்கள் நடந்துதான் உள்ளன.

ஆகாய விமானத் தாக்குதலுக்கு இலக்காக விருந்த கோயில்,வேறு ஒரு விமானியின் கடைசி நிமிட தலையீட்டால் நிறுத்தப்பட்டது. ஆகாயத்தில் நடந்த சம்பாஷணையை நாங்கள் கேட்கக்கூடியதாய் இருந்ததினால் நாங்கள் இதை அறிந்தோம். பிழையான தகவல் கொண்டு கோயில் மடத்தை எரிக்க பல வாகனங்கள் சகிதம் வந்த படையினர் பின்வாங்கினர். 1987இல் முதல்நாள் கோயிலில் கடுமையான தேடுதலில் ஈடுபட்ட தளபதி மற்றைய நாள் ''உங்கள் கடவுள் பெருமை வாய்ந்தவர்'' 'Your God is Great' என்று கூறிச்சென்றார். இவை எங்கள் கண்முன் நிகழ்ந்தவை, இவை உண்மையாயின் இக்கோயில் வரலாற்றில் கூறப்படும் அற்புதங்கள் எல்லாம் உண்மையே. சமீபத்தில் நடந்த சமபவங்களை ஒட்டிப் பார்க்கும் பொழுது அண்மைக்காலத்தில் சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையாரின் மூர்த்திகரம் முன் என்றும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளது. தொடர்ந்து அவர் அருள் பாலிப்பதற்காகவே இன்றைய கும்பாபிஷேகம். ★

## கிளிநொச்சி ம. வி. விளையாட்டுப் போட்டி

தாளையடி, மே 10

கிளிநொச்சி மத்தியமகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் வித்தியாலய அதிபர் திரு. என். சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் பிரதமவிருந்தினராக கிளிநொச்சி பதில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.கே. கே.சோமசுந்தரமும் சிறப்பு விருந்தினராக திரு. எஸ். வேலாயுதமும் கலந்து கொண்டார்கள்.

போட்டியில் முதலாமிடத்தை வள்ளுவர்இல்லமும், இரண்டாம் இடத்தை நாவலர் இல்லமும் மூன்றுமிடத்தை ஞானப்பிரகாசர் இல்லமும், நான்காம் இடத்தை பாரதி இல்லமும், ஐந்தாம் இடத்தை கம்பர் இல்லமும் பெற்றன. (க- 144)

## துறைமுகத்தில் கடல் நீர் வற்று

நெடுந்தீவு, மே 10

நெடுந்தீவு துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள கடல்நீர் வற்றுக் காரணமாக நெடுந்தீவு குறிகாட்டுவான் பயணிகள் படகு குறிப்பிட்ட நேரத்துக்கு இங்கிருந்து பிரயாணத்தைத்தொடரமுடியாதுள்ளது

படகு மிதக்கக் கூடிய அளவு பெருக்கு ஏற்படும் வரை பிரயாணிகள் துறை முகத்தில் காத்து நிற்க வேண்டியுள்ளது (க- 111)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| ✶✶ | ●● |
| 08 | 10 |
| 09 | 04 |
| 1906 | 1989 |

**திரு. சடாசிவம் கந்தையா அவர்கள்**

[Chief Clerk and Planter]

எம்மை அன்பால் வளர்த்த ஆருயிர் ஐயாவே! உங்கள் திருவுருவம் காணாது துடிக்கின்றோம். எங்களை அன்புடன் ஆதரித்து உலகிலே ஒளி பெறச் செய்து எம்மை துன்பக்கடலில் ஆழ்த்தி விட்டுச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'இலக்குமி வாசா'
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.          (454)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் கல்லெடுப்பும் சபிண்டீகரண அழைப்பும்



**அம்பலவாண ஐயர் விஸ்வலிங்கக் குருக்கள்**

மண்ணுலகில்: 21 - 12 - 1921          விண்ணுலகில்: 25 - 04 - 1989

இமைகளை மறந்த விழிகளாய்
விழிகளை இழந்த முகங்களாய்
முகங்களை தொலைத்த பாவிகளாய்
பாரினில் எங்களை தவிக்கவிட்டு
அவ்வுலகம் ஏன் சென்றீர் ஐயா?
உங்கள் உறவிழந்த துன்பமதால்
வருந்துகிறோம் ஐயா
இனி இறைபதம் சேர்ந்திருக்க
வணங்குகிறோம் ஐயா.

அன்பின் திருவுருவாய் அறிவின் சுடர் ஒளியாய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் உறவினரின் வழிகாட்டியாய் உற்றாரின் குருவாய் விளங்கிய எங்கள் ஐயாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல பாகங்களிலும் இருந்தும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் பலவழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் 10 – 05 – 89 புதன் காலை நடைபெறும் கல்லெடுப்பிலும் அன்று மதியம் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப் புஷ்பங்களை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிள்ளையார் கோயிலடி,
மாதகல்.          [457]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

**பொருள்:**
ஒருவன் உருளுகின்ற கருவியால் வரும்பொருளை இடைவிடாமல் கூறிச் சூதாடினால், பொருள் வருவாய் அவனை விட்டு நீங்கிப் பகைவரிடத்தில் சேரும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
10 - 05 - 1989 த: பெ: இல: 23

# தோட்டங்களில் நச்சு விதை!

மலையகத் தோட்டங்களில் தமிழர்களைப் பாதிக்கும் விதத்தில் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு. பி. சந்திரசேகரம் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார். அதனைக் கருத்தில் கொள்ளாமல், கவனிக்காமல் விட்டுவிட முடியாது; புறக்கணித்து விடலாகாது.

கிராம மீள்விப்புத் திட்டம் என்ற பெயரில், ஆண்டாண்டு காலமாகத் தமிழர்கள் வாழ்ந்த தோட்டப் பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றும் நடவடிக்கைகள் கடந்த அரசாங்க காலத்திலேயே தொடங்கி விட்டன. தோட்ட அபிவிருத்தி என்றும், பங்களிப்பு என்றும் மலையகத் தமிழர்கள் தமது பாரம்பரிய குடியிருப்புப் பகுதிகளிலிருந்து வேறு இடங்களுக்கு விரட்டப்பட்டதும் உண்டு.

மலையகத் தமிழர்கள் ஒரே தொடர் பிரதேசத்தில் வாழாமல், அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூடையில் இருந்த கனிகள் போலச் சிதறுண்டு வாழ வேண்டும். அதற்கு ஏற்றவாறு திட்டங்களைக் கொண்டு வந்து அவர்களைச் சிதறடிக்க வேண்டும். இந்த உள்நோக்கத்துடன் பல வகைகளிலும், பல தரப்பாராலும் நேரிலும் மறைமுகமாகவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த உள்நோக்கத்தை அடைவதற்காக, மலையகத் தோட்டப்பகுதிகளில் வன்செயல்களுக்கு வித்திடப்பட்டதும் உண்டு. பல சந்தர்ப்பங்களில் மிரட்டல் பாணி வன்செயல்கள் தூண்டப்பட்டதும் உண்டு. அதேபோல பல தடவைகளில் மலையகத் தமிழர்கள் அந்த மிரட்டல்களுக்கு அஞ்சாமல், வன்செயல்களை எதிர்கொண்டதும், பதிலடி கொடுத்ததும் பதிவான நிகழ்வுகள் ஆகும்.

மீண்டும் அதே உள்நோக்கத்துடன் மலையகத் தோட்டங்களில், தமிழ்த் தொழிலாளர் வாழும் பகுதிகளில் குடியேற்றங்களை நிறுவ இப்போதைய அரசும் முயற்சி செய்து வருகிறது என்ற தகவல் கவலைக்கு உரியதாகும். கண்டிக்கப்படவேண்டியதாகும்.

தமிழ்த் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழும் தோட்டப் பகுதிகளில் உருவாக்கப்பட இருக்கும் புதிய — உத்தேச — குடியேற்றத் திட்டங்களில், தமிழ்த் தொழிலாளருக்கு 50 சத வீதமும், சிங்களக் கிராம வாசிகளுக்கு 50 சத வீதமும் காணிகள் வழங்கு அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது அநியாயமானது என்பதை அனைவரும் உணர்வர், ஒப்புக்கொள்வர். ஆண்டாண்டு காலமாக சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்தவர்களுக்கும் வெளியாருக்கும் சம பங்கு கொடுப்பது என்ன விதத்தில் பொருத்தம்? எது வகையில் நியாயமானது? முழுக்க முழுக்க நாம் முன்னர் கூறிய உள்நோக்கத்துடன் உத்தேச— குடியேற்றங்கள் நடக்க இருக்கின்றன என்பதே உள்ளார்ந்த உண்மை.

மலையகத் தோட்டப் பகுதிகளை — கிழக்கு மாகாணத்தைப் போலாக்கிவிட வேண்டும் என்ற சதிக் கருவின் சிசுவே உத்தேச குடியேற்றத் திட்டங்கள். அதாவது கிழக்குத் தங்களுடைய தாயகத்தின் ஒரு பகுதி என்று தமிழர்கள் உரிமை கோராது தடுக்கும் விதத்தில், திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் இன விகிதாசாரத்தை மாற்றுவதற்கு தொடர்ச்சியான, இடைவிடாத முயற்சிகள், செயற்திட்டங்கள் அங்கு மேற்கொள்ளப்பட்டன.

அந்தத் துணிச்சலில், வடக்கு - கிழக்கு இணைப்பை ரத்துச் செய்யும் சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற குரலை அரசாங்க அமைச்சர்கள், ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

திட்டமிட்ட குடியேற்றங்களின் விளைவாகவும், தமிழர்கள் மீது வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டு அவர்களைத் துரத்தி, இடம்பெயரச் செய்வதன் மூலமும் கிழக்கில் மட்டுமென்ன வடக்கிலும் தமிழ் மண் கபளீகரம் செய்யப்பட்டு விட்டது.

இப்படி ஒரு நிலையை மலையகத்திலும் உருவாக்குவதன் ஆரம்பமே தோட்டங்களில் திட்டமிடப்பட்டுள்ள குடியேற்றத் திட்டங்கள் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை.

தமிழர் பிரச்சினை தீராத ஒன்றாக மாறியதற்கு மூல காரணமே குடியேற்றத் திட்டங்கள் தான், மண் பறிப்புத்தான். அதே நச்சு விதையை மலையகத்திலும் நாட்ட முனைவது மேலும் பிரச்சினைகளை வளர்க்கும் என்பதை அரசும், சிங்கள அரசியல்வாதிகளும், அவர்களது அடிவருடிகளும் இன்னமும் உணராதிருப்பது ஏனோ?

நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று அரசும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும், சிங்கள மக்களும் மனப்பூர்வமாக விரும்பினால், புதிய நோக்குடன், முற்றிலும் புதிய வழி செல்லத் தலைப்பட வேண்டும். பழைய சதிகளையும், துவேஷ உத்திகளையும் முற்றாகக் கைகழுவி விடவேண்டும். ஒன்றைச் சொல்லி மற்றதைச் செய்யவோ — புதியதைச் சொல்லி பழையதையே செய்யவோ — மொத்தத்தில் இரட்டை வேடம் போடவோ நினைக்கக்கூடாது.

# மே 15 முதல் மங்கோலியாவிலிருந்து சோவியத் துருப்புக்கள் வெளியேறும்

## டெங் - கோர்பச்சேவ் உச்சி மாநாட்டுக்கு முன்னோடியாக

டோக்கியோ, மே 9

மங்கோலியா நாட்டில் இருந்து சோவியத் துருப்புக்கள் இம்மாதம் 15 ஆம் திகதியில் இருந்து வெளியேறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் இம்மாத இறுதியில் சீனா விஜயம் செய்கிறார்.

அதையொட்டியே சோவியத் துருப்புக்கள் மங்கோலியாவில் இருந்து வெளியேறும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மங்கோலியாவில் 55 ஆயிரம் சோவியத் துருப்புக்கள் உள்ளன. இவற்றில் 41 ஆயிரம் துருப்புக்கள் முதலில் சோவியத் யூனியனுக்கு மே 15 முதல் திரும்பும்.

சீன - சோவியத் ராஜதந்திர உறவுகள் சகஜ நிலைக்குத் திரும்ப பீகிங் அரசு 3 நிபந்தனைகளை விதித்திருந்தது. அவற்றில் ஒன்று மங்கோலியாவில் இருந்து சோவியத் துருப்புக்கள் வெளியேற வேண்டும் என்பதாகும்.

1990 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 75 சத வீதமான சோவியத் துருப்புக்கள் விலக்கப்பட்டு விடும்.

சோவியத் துருப்புக்கள் வெளியேறுவதனால் முதலாளித்துவ நாடுகளுடனும் மங்கோலியா தொடர்பு வைக்கும் என்று அந்நாட்டுத் தலைவர் ஜாமின் பட்முன்க் கூறினார்.

சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் சீனத் தலைவர் டெங்-ஸியா-பிங் உச்சிமாநாடு இம்மாத இறுதியில் பீகிங்கில் நடைபெறவுள்ளது. (எ)

### ராட்சத விண்கலம் விழுந்த இடம்

நியூயோர்க், மே. 9

ராட்சத எரிநட்சத்திரம் ஒன்று ஒன்றரைகோடி ஆண்டுகளுக்கு முன்பூமியில் விழுந்த இடம் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது.

மத்திய ஐரோப்பாவில் 200 மைல் குறுக்களவு கொண்ட வட்டவடிவமான குழி ஏற்பட்டுள்ளது.

இது எரிநட்சத்திரம் விழுந்ததினால் ஏற்பட்டிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு இது குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். (எ)

# நீதிக்காகப் போராடுவதற்கு காங்கிரஸ் - அ.தி.மு.க இணைப்பு

சென்னை, மே, 9

தமிழ்நாடு சட்டசபையில் கடந்த மார்ச் 25 ஆம் திகதி இடம் பெற்ற அமளிதுமளிக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக அ.தி.மு.க.வும் இந்திரா காங்கிரஸும் இணைப்புக் கமிட்டி ஒன்றை அமைத்திருக்கிறது.

இத்தகவலை தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார். திரு. இராமமூர்த்தி மேலும் சொன்னதாவது;

அ.தி.மு.க.வுடன் காங்கிரஸ் இணைந்துள்ளது நீதிக்கான போராட்டத்தை நடத்தவே. நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக இரு கட்சிகளும் முடிவு எடுக்கவில்லை.

தி.மு.க.வுடன் காங்கிரஸ் இணையுமா? என்பது பற்றிய விஷயமும் முடிவானதாக இல்லை.

கர்நாடக அமைச்சரவைக் கலைப்பு சம்பந்தமாக முதலமைச்சர் கருணாநிதி தாமதமாகக் கண்டனம் வெளியிட்டார். இது தேசிய முன்னணியில் இருந்து தி.மு.க. வெளியேற எண்ணி வருவதையே எடுத்துக்காட்டுகிறது.

இப்படி திரு. இராமமூர்த்தி சொன்னார். (எ)

# பனாமாவில் பதற்ற நிலைமை ஜனாதிபதி தேர்தல் முடிவுகளின்பின்

பனாமா நகரம், மே. 9

பனாமா ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தற்போதைய நாட்டின் தலைவராக இருக்கும் நொரியாகோ தான் வெற்றியீட்டி இருப்பதாக அறிவித்திருக்கிறார். ஜெனரல் நொரியாகோவை ராணுவம் ஆதரிக்கிறது.

எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளருக்கு 45 சத வீத வாக்குகள் கிடைத்தன. எதிர்க்கட்சி வேட்பாளரும் தான் தேர்தலில் வெற்றியீட்டியதாக அறிவித்திருக்கிறார்.

ஜெனரல் நொரியாகோவின் அறிவிப்புப்படி, 18 ஆயிரம் பெரும்பான்மை வாக்குகளினால் அவருக்குவெற்றிவாய்ப்பு கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

எதிர்க்கட்சி வேட்பாளர் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்படி தனது ஆதரவாளரைக் கேட்டிருக்கிறார்.

இதனிடையில் பல இடங்களில் பொலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன என்று தெரிகிறது. (எ)

### ★ சென்னையில்

# விவேகானந்தர் தங்கியிருந்த கட்டடத்தில் ஆராய்ச்சி நிலையம்

## ராமகிருஷ்ண மடம் நடவடிக்கை

சென்னை. மே 9

சென்னை, திருவல்லிக்கேணியில் சுவாமி விவேகானந்தர் தங்கியிருந்த கட்டடத்தைத் தங்களிடம் ஒப்படைக்கும்படி இராமகிருஷ்ணமடம் தமிழ்நாடு அரசைக் கேட்டுள்ளது.

இந்தக் கட்டடம் விவேகானந்த இல்லம் என்று அழைக்கப்படுகிறது.

1898ஆம் ஆண்டு அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் சுவாமி விவேகானந்தர் உலகப்புகழ்பெற்ற பிரசங்கத்தை நிகழ்த்தினார். அதன்பின்னர் இந்தியா திரும்பிய சுவாமி விவேகானந்தர் சென்னையில் இந்தக் கட்டடத்தில் 9 தினங்கள் தங்கியிருந்தார்,

அந்த விஜயத்தின் நினைவாக இக்கட்டடத்தில் ஓர் ஆராய்ச்சி நிலையத்தை இராமகிருஷ்ண மடம் நிறுவ உத்தேசித்திருப்பதாக மடத்தின் முகாமையாளர் சுவாமி ராகவேஷானந்தாஜி தெரிவித்தார். [எ]

## பொம்மை குற்றச்சாட்டு

ஹீப்ளி, மே 9

ஆந்திரா, அஸ்சாம் ஆகிய மாநிலங்களின் அரசுகளையும் கலைத்து ஆளுநர் ஆட்சியை ஏற்படுத்த மத்திய அரசு முயற்சிப்பதாக கர்நாடக முன்னாள் தலைவர் திரு. எஸ். ஆர். பொம்மை குற்றஞ் சாட்டினார். (எ)

ஜனதாதள் பதவிக்கு வரின்

# ராஜீவின் சுவிஸ் வங்கிக்கணக்கு முடக்கி வைக்கப்படுமாம்!

பம்பாய், மே. 9

வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனதாதள் கட்சி பதவிக்கு வந்தால் பிரதமர் ராஜீவ் காந்தி, திருமதி சோனியா காந்தி ஆகியோரின் சுவிஸ்வங்கிக் கணக்குகள் முடக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய பம்பாய் சிவாஜி பூங்காவில் நடந்த ஜனதாதள் பொதுக் கூட்டத்தில் ஜனதாதள் எ.ம்பியும் பிரபல வழக்கறிஞருமான ராம் ஜெத்மலானி இத்தகவலை வெளியிட்டார்.

"அவர் மேலும் பேசுகையில் திரு, காந்திக்கு எதிரான ஊழல் சம்பவங்கள் பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் என்னிடம் உள்ளன. அவற்றைச் சரியாகப் பயன்படுத்தி திரு. ராஜீவ்காந்தியை சிறைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. காந்தியும் திருமதி சோனியா காந்தியும் இந்தியாவில் பெர்டினன்ட் மார்க்கோஸ் இமல்டா ஆக விளங்குகிறார்கள்—" என்று சொன்னார்.

ஜனதாதள் தலைவர் திரு. வி. பி. சிங் பேசுகையில்,

"பிரதமர் காந்தி நாட்டின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் வகையில் நடந்து கொள்கிறார். வெளியாரின் நிர்ப்பந்தத்தின் கீழ் திரு. காந்தி இன்று நாட்டை ஆட்சி புரிகிறார். இது நாட்டின் பாதுகாப்பை பலவீனப்படுத்துவதாகும்— என்று சொன்னார். (எ)

### சமய சந்நிதிகளில்

## முத்துமாரி அம்பாள் கொடியேற்றம்

அராலி,மே10

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான கொடியேற்றம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

26ஆம், 27ஆம் திகதிகளில் வழமைபோல் பொங்கல்நடைபெறும் எனப் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். [ச-12]

## சரவணையில் கொடியேற்றம்

நாரந்தனை-சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில் கொடியேற்றம் இன்று 10 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறுகின்றது.

சப்பரத்திருவிழா 18ம் திகதி வியாழக்கிழமையும்—

தேர்த்திருவிழா 19ஆம்திகதி வெள்ளிக்கிழமையும்—

தீர்த்தத் திருவிழா 20ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும்.

## கொல்லங்கலட்டி பிள்ளையார் கொடியேற்றம்

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையார் கோயில் கொடியேற்றம் நாளை 11 ஆம் திகதிவியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறும்.

19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமையன்று காலை தீர்த்தோற்சவமும் நடைபெற உள்ளன. (ச)

## மருதடி பிள்ளையார்

சாவகச்சேரி, மே 10

நுணுவில் மேற்கு விளைவேலி மருதடிப் பிள்ளையார்கோயில் கொடியேற்றம் 11 ஆம் திகதி வியாழக்கிழமைநடைபெறும்.

தேர்த்திருவிழா 19 ஆம்திகதியும் தீர்த்தோற்சவம் 20 ஆம் திகதியும் இடம்பெறுகின்றன. (ச-31)

## வேரற்கேணி கந்தசாமிகோயில்

சாவகச்சேரி, மே 10

மட்டுவில் தெற்கு வேரற்கேணி கந்த சுவாமி கோயில் வருடாந்த உற்சவங்கள் இம்மாதம் 12 ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

பத்து நாள் உற்சவங்கள் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் இடம்பெறும்தேர் தீர்த்த உற்சவங்களுடன் நிறைவுறும்.

வேதாகம ஞானசாகரம் சிவஸ்ரீ. கி. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் உற்சவ காலக்கிரியைகள் நடைபெறும். (க-31)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 10

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலின் கொடியேற்றம் நாளை 11ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறும்.

19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ச)

## காளியம்மன் ஆலய வேள்வி

யாழ்ப்பாணம், மே 10

தெல்லிப்பளையில் உள்ள காளியம்மன் ஆலயத்தில் சனிக்கிழமை நடந்த வேள்வியில் ஐம்பதுக்கு மேற்பட்ட ஆட்டுக்கடாக்கள் பலியிடப்பட்டன.

வருடாவருடம் நடைபெறும் இந்த ஆலயப்பொங்கல் விழா இவ்வருடம் கடந்த [illegible] பெற்று சனிக்கிழமை காலை [illegible] ஏராளமானவர்கள் இதில் கலந்து கொண்டனர். (ஓ-3)

# வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு 1 கோடி 67 லட்சம் டாலர்கள்

## அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 10

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் யூ. என். எச். சி. ஆர். வடக்கு கிழக்கு பிரதேசத்துக்கு இவ்வாண்டு 1 கோடி 67 லட்சம் டாலர் பணம் ஒதுக்கி உள்ளது. இதில் போக்குவரத்து, வீடமைப்பு போன்றவற்றுக்கே கூடுதல் பணம் செலவிடப்படும்.

இத்தகவல்களை யூ. என். எச். சி. ஆர். அமைப்பின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எம்மால் முடிந்த அளவு இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவி வருகிறோம், திருமலை, மன்னார், யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள எம் அலுவலகங்கள் மூலம் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

செப்டம்பர் 87 முதல் மார்ச் 89 வரை 80 லட்சம் டாலர் செலவிட்டுள்ளோம். ஏப்ரல் 89 முதல் வருட முடிவு வரை 1 கோடியே 67 லட்சம் டாலர் செலவிடவுள்ளோம். இதில் 55 லட்சம் டாலர் போக்குவரத்து புனரமைப்புக்கும், 51 லட்சம் டாலர் வீடமைப்புத்துறைக்கும் செலவிடப்படும்.

இப்புனரமைப்புக்கு நியூசிலாந்து, சுவிஸ்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா, டென்மார்க், பின்லாந்து. ஜேர்மன் குடியரசு, ஜப்பான், நெதர்லாந்து, நோர்வே, சுவீடன், பிரிட்டன், ஆகிய நாடுகள் உதவி செய்துள்ளன. அந்நாடுகள் மொத்தமாக 63 லட்சத்து 80 ஆயிரம் டாலர் உதவியுள்ளன.

பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், குடி தண்ணீர் விநியோகம், மீன்பிடித் தொழில், விவசாயம்,மாணவர்களுக்குதொழில் பயிற்சி ஆகியன முக்கியமானவை.

இப்படி அவர் கூறினார். (இ-3)

# கொழும்பில் ஏமாறும் யாழ்ப்பாணத் தமிழர்கள்

யாழ்ப்பாணம், மே. 10

கொழும்பு செல்லும் யாழ். தமிழர்களை ஏமாற்றி பணம்பறிக்கும் ஒருவரின் மோசடி தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

இந்த நபரிடம் ஆயிரம் ரூபா கொடுத்து ஏமாந்த இருவர் நேற்று உதயன் காரியாலயத்துக்கு வந்து தமக்கு ஏற்பட்ட அனுபவத்தைத் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாவத்தையில் எம்மை அணுகிய நபர் ஒருவர் தாம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி ஸ்ரீதர் பட மாளிகைக்கு சமீபமாக உள்ள ஒரு மோட்டார் உதிரிப்பாகக் கடையின் உரிமையாளர் என்றும் —

கொழும்பு வந்த இடத்தில் தமது மகன் விபத்து ஒன்றில் சிக்கி உயிருக்காகக் கொழும்பு ஆஸ்பத்திரியில் போராடிக்கொண்டிருக்கிறான் என்றும்—

அவனுக்கு இரத்தம் ஏற்ற அவசரமாகப் பணம் தேவை என்றும் — கேட்டார். "ஓ" குரூப் இரத்தம் தேவை என்றும் ஒரு சிங்களவர் அந்த பிரிவு இரத்தம் வழங்க 3000 ரூபா கேட்கிறார் என்றும் தம்மிடம் 1200 ரூபா மட்டும் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பணத்துக்காக தம்மிடமிருந்த கைக்கடிகாரத்தையும் கமெராவையும் இவர் ஒப்படைக்க முற்பட்டார்.

இவரின் நடிப்பில் ஏமாந்த நாம் கைக்கடிகாரமும் வேண்டாம் கமெராவும் வேண்டாம் என்று கூறி எம்மிடம் இருந்த ஆயிரம் ரூபாவைக் கொடுத்தோம்.

பின்பு நாம் யாழ்ப்பாணம் திரும்பி அந்த நபரினால் தெரிவிக்கப்பட்ட மோட்டார் உதிரிப்பாகக் கடைக்குச் சென்றோம்.

நாம் ஏமாற்றப்பட்டது அப்போது தான் தெரிய வந்தது.

எம்மைப் போன்று எத்தனையோ நபர்கள் இப்படிப் பணத்தைப் பறி கொடுத்து விட்டு தமது கடைக்கு வந்ததாகக் கடை உரிமையாளர் தெரிவித்தார்.

இப்படி அவர்கள் தெரிவித்தனர். (இ- க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக் கட்டிவ் [Proce-sing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# உதயன்

10 - 05 - 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகளை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## துன்னாலையில் கொள்ளை முயற்சி; அயலவர்களால் முறியடிப்பு

வல்வெட்டித்துறை, மே 10

நேற்று முன்தினம், திங்கட்கிழமை இரவு துன்னாலையில் எஸ். குலவீரசிங்கம் என்பவரது வீட்டில் நடைபெற்ற கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது.

அயற்பகுதி மக்கள் கம்பு, பொல்லுகளுடன் சத்தமிட்டு ஒன்று கூடியதால் திருடர்கள் தப்பியோடினர் என அறிய வந்தது.

திருடர்களை இனங்கண்ட மக்கள் இந்திய இராணுவ முகாமுக்குச் சென்று முறைப்பாடு செய்தார்கள்.

நேற்றுக் காலை 10 மணியளவில் துன்னாலையில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் புலோலி இராணுவ முகாமுக்கு ஊர்வலமாகச் சென்று அதிகாரிகளிடம் முறைப்பாட்டு மகஜர் ஒன்றைக் கையளித்தனர். [க-160]

## ஆஸ்பத்திரிகளுக்குப் பாதுகாப்பு

கொழும்பு பெரியாஸ்பத்திரி மற்றும் பிரதான ஆஸ்பத்திரிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படவுள்ளன.

சுகாதார அமைச்சு அதிகாரிகள் இதற்காக ராணுவத்தினரதும் பொலிஸாரினதும் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இரண்டு பேர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இடம்பெற்ற 6ஆவது கொலைச்சம்பவம் இதுவாகும் என்று அமைச்சுப் பேச்சாளர் சொன்னார். [ஒ-எ]

## 3 சடலங்கள் மீட்பு

கொழும்பு, மே 10

வத்தேகம பொலீஸ்ப் பகுதியில் ஸ்ரீமல்வத்தை என்னும் இடத்தில் மூன்று பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.


கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட இச்சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டதற்காக இத்தண்டனை விதிக்கப்பட்டது என்று கூறும் வாசகங்கள் எழுதப்பட்ட அட்டை சடலங்களின் அருகில் காணப்பட்டது. [ஒ-எ]

## குழந்தைவேலு தலைவர்

அ. தி மு. கவின் எம். பி திரு. குழந்தைவேலு இந்திய லோக சபையின் பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக நேற்று நியமிக்கப்பட்டார். [அ 9]

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### சண்முகம் வேல்ராஜ் (செல்வம்)

தரணியில்: 30 - 04 - 69

விண்ணில்: 13 - 12 - 88

அன்பு மகனே ஆசைத் தம்பியே ஆறு மாதம் கடந்திடினும் உன்னை இழந்த துயர் நீங்கவில்லை கண்ணீர் மழை ஓயவில்லை உன்னை எண்ணும் போதெல்லாம் உச்சி வெடித்து உடல் கருகுதையா எம் இதயத் துடிப்பு இருக்கும்வரை உன் நினைவு இருக்கும். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கண்டாவளை, பரந்தன்,

ஐயா, அம்மா, சகோதரர்கள்.

அல்லிப்பளை, பளை.

[10881

## கிளிநொச்சிக்கு கடமைக்கு செல்லாதிருந்த ஆசிரியர்களுக்கு விசேட லீவு வழங்க உத்தரவு

யாழ்ப்பாணம், மே 10

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலின் போது அக்டோபர் 10 ஆம் திகதியிலிருந்து 1987 மூன்றும் தவணை முடியும்வரை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் சமுகம் கொடுக்காத ஆசிரியர்களுக்கு கிளிநொச்சி கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட சம்பளமற்ற லீவை வாபஸ் பெற கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

மேற்கண்ட காலப் பகுதியைச் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் சொந்த லீவில் கழித்து எஞ்சிய காலத்தை சம்பளமற்ற லீவாக வழங்கும்படி கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் உத்தரவிட்டிருந்தார்.

இதனைப் பலமாக ஆட்சேபித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்தது.

பொதுநிர்வாக அமைச்சின் 295ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் படி இவர்களுக்கு இக்காலப்பகுதியை விசேடலீவாக வழங்கவேண்டுமெனக் கோரியிருந்தது.

இக்கோரிக்கையைக் கல்வி அமைச்சு ஏற்று சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இக் காலப் பகுதியில் அகதிகளாக இருந்தார்கள் என உதவி அரசாங்க அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பித்தால் அவர்களுக்கு அக்காலப் பகுதியை விசேட லீவாகக் கணிக்கும்படி கிளிநொச்சி கல்விப் பணிப்பாளருக்குக் கடிதம் அனுப்பி உள்ளதாக ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-ச]

## நோர்வே, அமெ. அதிகாரிகள் நேற்று யாழ் நகர் விஜயம்

யாழ்ப்பாணம், மே 10

நோர்வேயைச் சேர்ந்த றெட்பானா நிறுவன அதிகாரிகள் நேற்று யாழ்நகருக்கு விஜயம் செய்தனர்.

யாழ். றெட்பானா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விதவைகள் உளவள மேம்பாட்டுத் திட்டத்தை அவர்கள் பார்வையிட்டனர்.

இதேவேளை அமெரிக்க உதவி வழங்கும் குழு ஒன்றும் நேற்று யாழ் நகருக்கு வந்திருந்தது.

மணல்காடு, சாவகச்சேரி, பருத்தித்துறை, குடத்தனை ஆகிய பகுதிகளில் முன்னர் ஆரம்பிக்கப்பட்டு பின்பு ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இடை நிறுத்தப்பட்ட நீர் வழங்கும் திட்டங்களை அவர்கள் பார்வையிட்டனர்.

மேற்படி திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவும அந்தந்த பகுதிகளில் குழாய்க் கிணறுகளைத் தோண்டி நீர் வழங்கும் திட்டங்களை ஏற்படுத்தவும் இந்தக் குழு தீர்மானித்துள்ளது. (ஒ-9)

## யாழ் மடம் வீதியில் கொள்ளை

குருநகர், மே10

ஞாயிறு இரவு யாழ் - மடம் வீதி தேவரிக்குளம் ஒழுங்கையிலுள்ள ஒரு வீட்டுக்குச் சென்ற நால்வர் அடங்கிய ஆயுத கோஷ்டி கொள்ளையில் ஈடுபட்டது.

சங்கிலி, தோடு, றொக்கப் பணம், கைக்கடிகாரம் என்பன கொள்ளையிடப்பட்டதாக அறியப்படுகிறது.

இதனை அடுத்து மடம் வீதியில் திங்கள் இரவு ஒரு வீட்டுக்கு வந்த கொள்ளைக் கோஷ்டியை அப்பகுதிமக்கள் ஒன்று கூடி மடக்கிப் பிடிக்க முயற்சித்தபோது அவர்கள் ஓடித் தப்பித்துக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முதல்நாள் தேவரிக்குளம் ஒழுங்கையில் கொள்ளை நடத்திய கோஷ்டியே மறுநாள் மடம் வீதியில் கொள்ளை நடத்த வந்திருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். [ஒ-51

## முன்னாள் புளொட் உறுப்பினரே மரணமானவர் என அடையாளம்

வவுனியா, மே 10

சில தினங்களுக்கு முன்பு ஹொரவப்பொத்தானை வீதி அந்தோனியார் ஆலய வளவினுள் இறந்து கிடந்த இளைஞர் பெரியதம்பனையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் லோகலிங்கம் [வயது 26] என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் முன்னாள் புளொட் உறுப்பினர் என்றும் வழமை போல பழைய காயம் ஒன்றுக்கு சிகிச்சை பெற யாழ். ஆஸ்பத்திரி கிளினிக்கிற்குச் செல்வதற்காக வவுனியாவிற்கு வந்தபோதே மர்மமான முறையில் இறந்து கிடந்தார் என்று மரண விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

தாக்குதல் காரணமாக உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டதுடன் உள் இரத்தப் பெருக்கினால் மரணம் ஏற்பட்டது என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் கொலை எனத் தீர்ப்பளித்தார். [ஒ-164]

## பார்வையிட அனுமதி இல்லை

மட்டக்களப்பு, மே 10

மட்டக்களப்பிலுள்ள இந்தியப்படை முகாம்கள், புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை மறு அறிவித்தல்வரை உறவினர்கள் பார்வையிட அனுமதிக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலிடத்தின் பணிப்புரையின் பிரகாரம் இம்முடிவு செய்யப்பட்டுள்ளதாம். [ஒ-21]

## மினி சினிமா உபகரணங்கள் பறிமுதல்

வல்வெட்டித்துறை. மே 10

தேவரையாளி திக்கம்பிளவு பகுதியிலுள்ள மினி சினிமா ஒன்றின் படம் காட்டும் கருவிகள் மற்றும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அந்த மினி சினிமாவில் தொடர்ந்து படக் காட்சிகள் காட்ட முடியாதவாறு அது 'சீல்' வைத்து மூடப்பட்டும் உள்ளது.

ஆபாச படம் காட்டியதாலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறிய வருகிறது.

அமைப்பு ஒன்றே இந்நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. [ஒ-168]

## தோட்டத்துரை வீடு தீக்கிரை

கொழும்பு, மே 10

பன்வில பொலீஸ்ப் பகுதியில் கெலஸாக்க தோட்டத் துரையின் வீடு கடந்த சனிக்கிழமை நள்ளிரவு ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்றினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

பதினைந்து லட்சம் ரூபாவுக்கு அதிகமான பொருள்கள் தீக்கிரையானதாக அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## 15 ஆம் திகதிக்கு முன் அனுப்ப கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

இலங்கை வங்கி ஐம்பதாவது ஆண்டு நிறைவு வைபவத்தை ஒட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்படும் கட்டுரைப் போட்டியில் பங்கு பற்றும் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களின் கட்டுரைகளை எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கும்படி பாடசாலை அதிபர்களை இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர் கோரியுள்ளார். (ஒ-3)

## மின்சாதனங்கள் சேதமாகின

கொக்குவில், மே 10

கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள பல வீடுகளில் இருந்த மின்சாதனப் பொருள்கள் அதிக மின் அழுத்தம் காரணமாக சேதமடைந்தன.

வானொலிப் பெட்டிகளும், நீரிறைக்கும் சாதனங்களுமே அதிகளவில் சேதமுற்றன. (ஒ-68)

### தமிழ் மகளிருக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

அறிய வந்தது.

இங்கு வந்து மதிப்பீடுகள், விவரங்கள் திரட்டியது போல கிழக்கு மாகாணத்துக்கும் சென்று இவர்கள் விவரம் திரட்ட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் அடுத்த சில மாதங்களில் பாதிப்புற்ற தமிழ்ப் பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. [அ-3]

### பிரசா....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணம், கிளிநொச்சி ஆகிய பகுதிச் செயலகங்கள் இயங்கவில்லை. இதனால் பலர் விண்ணப்பங்களைக் கையளிக்க முடியாமற் போனது.

எனவே இந்த விண்ணப்பங்களை ஒப்படைக்கத் தவறியோர் யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதி ஈ. பி. ஆர். எல். எவ். முகாம்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [அ-9]

## அரசியல் கட்சிகளுடன் கருத்து உடன்பாடு காண நான்கு மந்திரிகள் நியமனம்

கொழும்பு, மே 10

நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அனைத்து அரசியல் கட்சிகளுடன் கருத்து உடன்பாடு காண நான்கு சிரேஷ்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் பேச்சுக்கள் நடத்த அமைச்சர் தொண்டமானும்-

சுதந்திரக்கட்சியுடன் பேச்சுக்கள் நடத்த அமைச்சர் காமினி திஸநாயக்காவும்-

மக்கள் ஐக்கிய முன்னணி ஐக்கிய சோஷலிச அணி, மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளுடன் பேச அமைச்சர் லலித் அத்துலத்முதலியும்-

தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஏனைய தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்த அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது.

ஏற்கனவே திரு. தொண்டமான் தமிழர் அமைப்பு ஒன்றுடன் பேச்சுக்கள் நடத்திவிட்டார். [ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி. சிவக்கொழுந்து சிவகுரு

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து சிவகுரு 8.5.89 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற அருணாசலம் சிவகுரு (மலாயன் பென்சனர்) அவர்களின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி பஞ்சலிங்கம் (உரும்பராய் இந்துக் கல்லூரி), கமலாம்பிகை இராசேந்திரம் (உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை), சற்குணதேவி முத்துலிங்கம் (வசாவிளான் ம.ம. வித்தியாலயம்), சிவபாதசுந்தரம், சிவலோகநாதன் (U.K), சிவானந்தன் (கனடா), சாந்தி (U.D.A கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் பஞ்சலிங்கம் (கொக்குவில் இந்துக் கல்லூரி), இராசேந்திரம் (P.H.I பூனகரி), முத்துலிங்கம் (C. T. B கோண்டாவில்), ஜெயதேவி, சதாயினி, சற்குணதேவி ஆகியோரின் மாமியாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வியாழக்கிழமை (11.5.89) காலை 8-30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்.

பெற்றோல் நிலைய ஒழுங்கை,
உரும்பராய். (456)

### தில்லையம்பலம் செல்லத்துரை

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய தேயிலை தொழிற்சாலை அதிபர் இதல்கஸ்தன்னை தில்லையம்பலம் செல்லத்துரை 9 - 5 - 89 இல் இறைவனடி சேர்ந்தார். இவர் சிரோன்மணியின் அன்புக் கணவரும் திருமதி விக்னேஸ்வரி (தபால் அதிபர் நாச்சிமார் கோவிலடி), திருமதி கமலேஸ்வரி (ஆசிரியை இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம்), திருமதி இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. தனஞ்சயன் (மகாராஜா ஸ்தாபனம் கொழும்பு), திரு. நடராஜா [இதல்கஸ்தன்னை தோட்டம்], திரு. சிவராசா [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், அளவெட்டி செல்லம்மாவின் அருமைச் சகோதரரும் பிரசன்னா, துஷ்யந்தன், நர்மதா, சிந்துஷா, தனுஸீயன், கயன், அரி, ஆத்மிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 10 - 5 - 89 இன்று புதன்கிழமை பி. ப. 3.00 மணியளவில் 550/5 K. K. S. வீதி இல்லத்தில் இருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி செ. சிரோன்மணி,
(மனைவி)

550/5 K. K. S. வீதி,
யாழ்ப்பாணம். [460]

### திரு. வ. மகாலிங்கம் (B . A) L L . B

[சட்டத்தரணி]

கரவெட்டி மேற்கைச் சேர்ந்தவரும், முன்னாள் உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியரும், நெல்லியடி ம. ம. வி. துணை அதிபரும், பருத்தித்துறை நீதிமன்ற பிரபல சட்டத்தரணியும், பிரபல பத்திரிகையாளரும், பிரபல சமூகசேவையாளருமான திரு. வ. மகாலிங்கம் அவர்கள் அகாலமரணமானார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி பா. மகாலிங்கம்.

(10876)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 10—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது